பதிவுஎண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று






| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1-12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 1 | அக்ஷய-வருஷ சித்திரை-மீ 13-உ (25—4—26) ஞாயிற்றுக்கிழமை, ஈரோடு. | மலர் 48.



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர்

## சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சுவேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும்முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,

ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா.

## திருப்பூர்

## சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள், இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும், தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். ஆர்டர் 100-க்கு 25 ரூபாய்வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்,

காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

என். கே. சங்கரப்ப செட்டியார்,

கத்தர் ஸ்டோர், திருப்பூர். (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாக்ஷி

## பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) ¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## திருப்பூர்

## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு

## அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்;

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

# சமத்துவம்.

கொழும்பு "சமத்துவ ஊழியனில்" திரு. பெ. பெரி. சுப்பிரமணியச் செட்டியார் எழுதுவது.

"சமத்துவம்" என்றால் எல்லாவற்றையும் சமனாக எண்ணுதல், எல்லாவற்றிடத்தும் சமனாக நடத்தல் என்று பொருள்படும். இங்கு மனிதர்களை மனிதர்கள் சமத்துவமாக நடத்தவேண்டுமென்ற முறையினையே நாம் வலியுறுத்துகின்றோம். "சமத்துவம்" என்ற தனிப்பெருங் கொள்கையை நிலைநிறுத்தவே இந்திய காங்கிரஸ் மகாசபை தோன்றிற்று. காங்கிரஸ் மகாசபையெனும் அப்பெண்ணரசி பல உயர்ந்த நோக்கம் படைத்த வீரர்களைப் பெற்றுவருகிறாள். அவ்வீரர்கள் அன்றுமுதல் இன்றுவரை சமத்துவம், சமத்துவம் என்று இடைவிடாது கதறிக்கொண்டு வருகிறார்கள். சுயநலமும், செல்வப்பெருக்கும், அகங்காரமும் கொண்ட பலர் அம்மாபெருமையக் கத்தைக் கொன்றுவிடக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகிறார்கள்கள். இவைகளுக்கிடையே சில போலித் தேசாபிமானிகள் ஜனங்களை வஞ்சிப்பதற்காக தேனொழுகும்படியாகப் பேசியும், பரமயோக்கியர்களைப் போன்று எழுதியும் "தேசாபிமானி, பரோபகாரி" என்னும் பட்டங்களை சூட்டிக்கொள்ளப் புறப்பட்டுவிட்டார்கள். ஜாதிக்கர்வம் படைத்த சில வைதீகப் பார்ப்பனர்களும், வேறு சில கூட்டாத்தார்களும் தங்களுடைய செல்வாக்கு மாண்டுவிட்டப்போகிறதே என்று வாயிலும் வயிற்றிலுமடித்துக்கொண்டு ஊரெல்லாம் ஊளையிட்டு திரிகிறார்கள். இவ்வளவு கூக்குரல்களுக்கும், மாரடிப்புகளுக்குமிடையே எப்படி சமத்துவம் வளருமென்பதை நீங்களே யோசித்துபாருங்கள். 25000ம் மைல்கள் சுற்றளவும், 32 கோடி ஜனங்களுமுள்ள நமது பெரிய இந்தியநாட்டில் இன்று 7 கோடி பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவிருந்து வருகிறார்கள். இந்தியநாட்டில் ஜனத்தொகையில் 4 அரையில் ஒருபங்குகொண்ட இவர்களை பார்க்கக்கூடாதவர்கள், தொடக்கூடாதவர்கள், கிட்டவரக்கூடாதவர்கள் என்று மூன்று கூறு போட்டு வைத்திருக்கிறார்கள். இவர்களைப் பல ஜாதியாக வகுத்து வைத்திருக்கிறார்கள். இப்பெருங் கூட்டாத்தார்கள் தொன்றுதொட்டு என்றென்றும் தங்களுக்கடிமையாக விருக்கவேண்டுமென்ற ஒரே எண்ணங்கொண்டு இவர்களுக்கு கல்விகற்றுக் கொடுக்கப்படுவதில்லை. பணம் மிகுந்துவிட்டால் அடிமையாக வாழமாட்டார்களே என்ற கெட்ட எண்ணங்கொண்டு அவர்களுக்கு நியாயமான சம்பளமும் கொடுக்கப்படுவதில்லை. இவ்வேழைமக்கள் வெள்ளை உடையுடுத்தி, நாகரிக உணவுஉண்டு பார்ப்பதற்கு சிறப்பாக வாழ்வார்களானால் தங்களுக்கு கௌரவமில்லாது போய்விடுமே யென்ற கொடிய எண்ணத்தைக்கொண்டு அவர்களை அநாகரீகர்களாக்கி வருகிறார்கள். அல்லவென்றால், பட்டம் பெறுவதற்காக லெட்சலெட்சமாகச் செலவிடும் அப்பணங்களைக்கொண்டு பள்ளிக்கூடங்கள் கட்டிவைத்து ஏழைமக்களுக்கு கல்விகற்றுக் கொடுக்கக் கூடாதா? இடிவிழுந்தாலும் உடையாத அவ்வளவு வல்லபமாகக் கட்டப்பட்டிருக்கும் பழைய கல்லுக்கோவில்களை இடித்து லெட்சக் கணக்கான பணங்களை வாரி இறைத்து மீண்டும் மீண்டும் கல்லையே கொண்டுவந்து அடுக்கும் இப்பலனற்ற செயலினை விடுத்து, இதற்காகக் கொட்டப்படுகின்ற வீண் பொருளை ஏழைமக்களுக்குத் தானமாக வழங்கக்கூடாதா? நாட்டிலுள்ள வீரமக்களைச் சோம்பேறிகளாக்கத் தோன்றியிருக்கும் மடங்கள், சத்திரங்கள், முதலியவற்றிற்காக அள்ளிக்கொடுக்கும் எண்ணற்ற பொருட்களை ஏழைமக்களுக்கு உடைவாங்கிக் கொடுப்பதற்கும், நாகரிகமுடையவர்களாக்கும் பொருட்டு பிரசாரமுதலிய செலவுகளுக்குமாகக் கொடுக்கக்கூடாதா? இப்படியெல்லாம் செய்தால் இவர்களுக்கு நல்லப்பயன் கிடைத்துவிடுமல்லவா? அது கடவுளுக்கே சம்மதமில்லை போலும்! செல்வமும் அகங்காரமும் படைத்த இச்சுயநலப் புலிகளால் ஏழைமக்களுக்கே தீங்குவந்து சேருகிறது. இவர்கள் அடக்கி ஆளுவதும், தாழ்த்திவைத்திருப்பதும், காலைதென்று எண்ணி அதிகாரிவர்க்கத்திற்கு நல்ல பிள்ளையாக வேண்டுமென்று கற்றி வரிகளைக்கூட்டியும், பிறநலன்களைக் கெடுத்தும் ஏழைவாயில் மண்ணைப்போடுகிறார்கள். ஏழை நல்ல நிலையிலிருந்தால், தங்களுக்கு செல்வாக்கில்லாது போய்விடுமே என்ற கவலை இச்சுயநலப் புலிகளைப்பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது. "முடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான் கொல்லும்" என்ற பழமொழியையும் மறந்து விட்டார்கள். இப்புன்மக்களின் அசட்டுப்புத்தியும், குருட்டு நம்பிக்கையும் என்று தொலையுமோ அன்றுதான் பாரதநாட்டிற்கு நல்லகாலம் பிறக்கும். 7 கோடி ஜனங்களை தாழ்த்தப்பட்டு வைத்திருக்கும் கொடுமை ஆற்றமுடியாதது. அவர்களை காடுகளில் திரியும் விலங்குகளைப்பார்க்கிலும் கொடுமையாக நடத்துவதென்றால் இவர்களில் நின்றும் கொடியவர்களை எங்கு தேடிப்பிடிப்பது? தாழ்த்தப்பட்ட குலத்திற் பிறந்த குற்றத்திற்காக அவர்களை இழிவாக நடத்துவதென்றால் இதில் நின்றும் அநீதி வேறு என்ன விருக்கிறது? பார்ப்பன்குலத்திற் பிறந்த ஒருவன் இழிதொழிலில் இழிதொழிலான பெண்தரகு பார்ப்பதும், விழிபிதுங்கும்படியாக மதுபானங் குடிப்பதும், மூக்குப்பிடிக்க மாட்டுஇறைச்சி முதலியவற்றைத்தின்பதும் கன்னமிட்டுக் களவிடுவதும் பொய்சொல்லுவதுமாகிய ஈனத்தொழிலைச் செய்தாலும் அவன் உயர்ந்தவனாகவே எண்ணப்படுகிறான்; பிரமதேவனின் முகத்தினின்று குதித்து வீழ்ந்தவனாகவே கருதப்படுகிறான். புலையர் குலத்திற் பிறந்த ஒருவன் ஒழுக்கமென்று உயர்ந்தோரால் வகுக்கப்பட்ட மெய்நெறிவழியே ஒழுகும்பரமபுண்ய புருஷனாகவிளங்கிலும் அவன் இழிந்தவனாகவே எண்ணப்படுகிறான், பிரமதேவனின் காலினின்றுதோன்றிய சூத்திரனாகவே தள்ளப்படுகிறான். அந்தோ! என்னே அறிவுகெட்ட உலகத்தின் அநீதி! பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவனாகி விட முடியுமா? உயர்ந்த குலத்தானென்று வாய்ப்பறை அறைந்து கொள்ளும் ஒரு புன்மகன் 12மாதமா கருப்பத்திலிருக்கின்றான்? அவன் கருக்குழிவழியாகப் பிறவாது, சிங்கக் குட்டியைப்போன்று வயிற்றைப்பிளந்துகொண்டா பிறந்துவிடுகிறான்? வயிற்றைப்பிளந்து பிறக்கும் சிங்கமுமன்றோ ஆன்றோரால் விலங்கென்று மக்களுக்கு கீழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் உயர்ந்தவனாக வேண்டுமானால் அறிவால் உயர்ந்தவனாகலாம், ஒழுக்கத்தாலுயர்ந்தவனாகலாம். இவற்றை விடுத்து பிறப்பால் உயர்ந்தவனாகி விடலாமென்று, அறிவு நிறைவுற்ற இக்காலத்தில் ஒரு ஜாதிக்கர்வம் பிடித்த ஒருவன் கூறுவானாயின் அவனை என்னென்றழைப்பது? அந்தோ! தாங்கள் பெரிய பண்டிதர்களென்றும், அநேக சமயவாராய்ச்சி சங்கங்கள் கண்டவர்களென்றும், கூறிக்கொள்ளும் வைதீகப் புலிகள் என்னசெய்கின்றார்களென்று தெரியவில்லை!- தன் மதத்தின் தன் மதத்தினர் செய்யுங் கொடுமைகாற்றுத் பிறமதத்தி புகுவதை அவர்கள் காதுகள் கேட்கவில்லையா? கண்கள் பார்க்கவில்லையா? அவைகள் செவிடும் குருடுமாகிவிட்டனவா? இவர்களின் வாய் வேதாந்தத்தின் பொருளென்னை? இவர்கள்தான் இந்துமதத்தைக் கொலை செய்யப்புறப்பட்டகூற்றுவர்கள். இத்தகைய கொடியவர்கள் நாட்டிலிருக்கும் வரையில் சமயம் எப்படி வளரக்கூடும்? இவர்களை நம்பிக்கொண்டு வீணாகக் காலம் கழிப்பதில் பிரயோஜனமில்லை. சமத்துவம் நாட்டங்கொண்டு உழைக்க விரும்பும் அன்பர்கள் விரைந்து முன் வருதல்வேண்டும். ஆங்காங்கு பல சமத்துவச் சங்கங்கள் நிறுவவேண்டும் அதி தீவிரமாகச் சமத்துவப் பிரசாரம் செய்யவேண்டும். சமத்துவத்தை நிலைநாட்டப் பல பத்திரிகைகள் புறப்படவேண்டும். நல்லெண்ணம் படைத்த பணக்காரர்கள் சமத்துவ வளர்ச்சிக்காக பொருளை அள்ளி இறைத்தல் வேண்டும். கற்ற அறிவாளர்கள் சமத்துவம் குறித்து பேசியும் எழுதியும் வருதல் வேண்டும். தாழ்த்தப்பட்டு ஒதுங்கிக்கிடக்கும் அப்பெருங் கூட்டாத்தார்கள் இனியும் உறங்கக்கூடாது. "தன் கையே தனக்குதவி" யென்பதை அவர்கள் உணரவேண்டும். பிறரை எதிர்பார்ப்பது கனவாகவே முடியும். ஒவ்வொரு குலத்தாரும் தனித்தனியே ஒவ்வொரு சங்கம் காணவேண்டும். பொறாமையையும், சோர்வையும் விடுத்து கட்டுபாடாகவும் அதிதீவிரமாகவும் உழைக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்வதற்கு, சமத்துவப் பிரசாரத் தொண்டர்கள் முன்னணியில் நின்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அப்படி அல்லவென்றால் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவது முடியாததாகிவிடும். வீணைப்பறையறையும் அசட்டுப் புன்மக்களின் புன் சொல்லில் வீழ்ந்துவிடாது தாழ்த்தப்பட்ட வகுப்பார் விழித்துக்கொள்ளவேண்டும். காலம் மாறிக் கொண்டு வருவதால் இம்மாறுதலும் அதி சீக்கிரத்தில் வந்துவிடும். தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்த நிலைக்கு வரும் காலம் அதிக சமீபத்தில் வந்துவிட்டது. வைதிகர்களின் ஜாதிக்கர்வமும், பணச்செருக்கும், அட்டகாசமும் சூரியன் முற்பட்ட பனியைப்போன்று மாண்டுகொண்டுவருவதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. சமத்துவக் காற்று எங்கும் வீசுகின்றது. அது நிலைநின்று வளர்ச்சியுற முருகன் அருள்பாலிப்பானாக.

## ஸ்ரீமான்
## சி.வி. வெங்கட்ரமண அய்யங்காரின்
# தர்ம விளம்பரம்.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

சட்டசபைத் தேர்தல்கள் சமீபத்தில் வரவர அபேக்ஷகர்கள் அதிகமாய் விளம்பரமாகும்படி செய்துகொள்வது எங்கும் சகஜமானது. இதில் அபேக்ஷகர்கள் முன் செய்த வேலைகளையும் பின் செய்யப்போகும் வேலைகளையும் சொல்லுவதும் இயற்கை. ஆனால் நமது ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் அந்த இரண்டுமல்லாத புதிய ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அதென்னவெனில்:—

ஒரு பெரிய தர்ம விளம்பரம் அதாவது, தான் 2 லக்ஷம் ரூபாய் தனது சொத்திலிருந்து தர்மம் செய்ய இருப்பதாகவும், அந்த தர்மங்கள் இன்ன இன்னருக்கு உபயோகப்படத் தகுந்தது என்றும் சில ஒட்டர்களுக்கும் ஓட்டுத் தரகர்களுக்கும் வாயில் தண்ணீர் ஊறும்படி வாய்பறை, பத்திரிகை பறையடிப்பதோடு நில்லாமல் திறப்பு விழாப்பறையும் அடித்தாகிவிட்டது.

ஆனால் நடந்த விஷயந்தான் என்ன? "தர்மப்பிரபு ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் திறப்புவிழா ஆரம்பத்தில் தனது தர்மத்தின் பெருமையைப்பற்றி பேசியவைகளின் சுருக்கம் இதில் குறிப்பிடுகிறோம். இதிலிருந்தே பலவிஷயம் தெரிந்துகொள்ளலாம். இது 14–4–26-ம் தேதி 'சுதேசமித்திரன்' 6-வது பக்கம் 2-வது, 3-வது கலங்களில் காணப்படுகிறதாவது:—

1. "எனது நண்பர்களும் பொதுஜனங்களும் என்னை முனிசிபல் கவுன்சிலர் பதவிக்கும் தாலூகா போர்டு பதவிக்கும் தெரிந்தெடுத்தனர். சேர்மனாகவும் தெரிந்தெடுக்கப்பட்டேன். சென்னை சட்டசபைக்கும் தெரிந்தெடுக்கப்பட்டேன். 1923-ம் வருஷம் இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டேன். (இது உண்மையல்ல ப-ர்)

பொது ஜனங்கள் என்னிடம் நடந்துகொண்ட அன்பைப் பார்த்ததும் என்னுடைய வருவாயில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை தர்மத்திற்காகச் செலவிடத் தீர்மானித்தேன்.

என்னுடைய சொத்தில் ஒருபகுதியை தர்மத்திற்காக ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்தேன்.

2. 1924ல் இதனை பகிரங்கப்படுத்த ஆதியில் உத்தேசித்தேன்

அப்பொழுது எனக்குப் பெரும்பொருள் நஷ்டமானதால் நான் இதை பகிரங்கப்படுத்துவதை ஒதுக்கிவைக்க நேர்ந்தது.

1925-ல் முன் வருஷத்தைவிட அதிக நஷ்டம் ஏற்பட்டதால் இவ்வருஷத்தில்தான் எனது எண்ணத்தை பஹிரங்கப்படுத்த முடிந்தது.

இவ்வருஷத்திலும் எனது செல்வ நிலை சீர்பெற்றுவிட்டதாகக் கூற முடியாவிட்டாலும் நான் எனது எண்ணத்தை பஹிரங்கப்படுத்துவதை ஒத்திவைத்துக்கொண்டுபோக விரும்பவில்லை.

இன்று எனது தர்மத்தின் அங்குரார்ப்பண விழா நடைபெறும்பொழுது அதற்கு ஆசிகூற நீங்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி வந்திருக்கிறீர்கள்.

3. தர்மத்திற்காக ஒதுக்கிவைக்கத் தீர்மானித்திருக்கும் நிலத்தின் மதிப்பு 2 லக்ஷம் ரூபாய் பெறுமென்று கருதுகிறேன். இந்நிலங்களுடன் கொஞ்சம் ரொக்கமும் ஒரு வீடும் தர்மத்திற்காக ஒதுக்கி வைக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன்.

இதனைப் பதிவுசெய்ய 2000 ரூபாய்க்கு மேல் செலவாகும்.

ஆனாலும் சீக்கிரம் சாசனம் பதிவு செய்யப்படும்.

4. அந்த சாசனப்படி இந்த சொத்தில் கிடைக்கும் வருஷ வரும்படி 10,000 ரூபாயைக்கொண்டு அடுத்த வருஷம் செலவு செய்யப்பட வேண்டியிருக்கும்.

5. முதல் வருடமான இவ்வருடச் செலவுக்காக 10,000 ரூபாய் ரொக்கமாய்ச் செலவு செய்திருக்கிறேன்.

6. (அ) தர்ம சொத்தின் மொத்த வரும்படியில் கால்பங்கு கோவில்களுக்கும், மதக் காரியங்களுக்கும் சாதாரண நிலைமையில் செலவிடப்படும்.

(ஆ) மற்றொரு கால்பங்கு, கீழ்தர வகுப்பிலுள்ள ஏழைகளுக்காக செலவிடப்படும்.

(இ) மற்றொரு கால்பங்கு இந்த ஜில்லா கிராமங்களிலுள்ளவர்களின் உதவிக்காக செலவு செய்யப்படும்.

(ஈ) மற்றொரு கால்பங்கு கல்விக்கும் கைத்தொழில் கல்விக்கும் செலவிடப்படும்.

(உ) இப்பணத்தை எவ்வெவ்வழிகளில் செலவிடப்படும் என்பதை டிரஸ்டிகளே நிர்ணயிப்பார்கள்.

(ஊ) டிரஸ்டிகள் பதவிக்கு பலவகுப்பினரும் தெரிந்தெடுப்பார்கள். எனது குடும்பத்தைச்சேர்ந்த சிலரும் டிரஸ்ட்டிகள் பதவி வகிப்பார்கள்." டிரஸ்ட்டிகளைப்பற்றி 'சுதேசமித்திர'னில் மேல்கண்டபடி கண்டிருக்கிறது

15–4–26-ன் 'சுயராஜ்யா'வில் "ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார், அவரது மனைவி, அவர் குமாரன் காயமான மெம்பர்களாவார்கள்" என்று கண்டிருக்கிறது. (ப-ர்)

7. "பின்வரும் வருவாயை எப்படிசெலவிட வேண்டுமென்று தற்பொழுதே சொல்ல எவராலும் முடியாது என்று நான் சொல்லுவதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஏனெனில் இது டிரஸ்ட்டிகளால் நிர்ணயிக்கப்படவேண்டிய விஷயம்.

8. தற்பொழுது பல தர்ம காரியங்களுக்கு பணம் உதவப்படுவதுடன் 6 இராப்பள்ளிக்கூடம், ஒரு இலவச வாசகசாலை ஒரு பெண் பள்ளிக்கூடம், ஒரு பெண் பாடசாலை முதலியவற்றை நடத்தவும் ஏழைகளுக்கு அடிக்கடி அன்னமளிக்கவும் ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறேன்.

9. இத்துடன் தேசிய வேலை செய்யும் பல தமிழ் பத்திரிக்கைகளுக்கு பொருளுதவி செய்ய நான் உத்தேசித்திருக்கிறேன்.

10. அல்லாமலும் கிராமத்தில் உருவான வேலை செய்ய உத்தேசித் திருக்கிறேன். ஆனால் செலவுக்கு மாத்திரம் பணம் வாங்கிக்கொண்டு முணுமுணுக்காமல் வேலை செய்ய முன்வருபவர்களைப் பொருத்தே இக்காரியம் நடைபெறவேண்டியிருக்கிறது.

சுப்பிரியின் ஊழியம் எனக்குக் கிடைத்திருப்பதுபற்றி சந்தோஷிக்கின்றேன். ஆனால் இன்னும் அவர் போன்றவர்கள் இன்னும் சிலர் வேண்டும்."

சீனிவாசய்யங்கார் ஒரு சிறிய உபந்நியாசம் செய்தார். (அவர் இந்த விளம்பர தர்மப் புரட்டின் இரகசியத்தை ஜாடையாய் வெளியில் காட்டினார். அதனால் அதை இங்கு வெளியிடவில்லை. இல்லாவிட்டால் ஸ்ரீ சீனிவாசய்யங்கார் உபந்நியாசம்கூட வெளியிட முடியாமல் விட்டுவிட முடியுமா?

1. இத்தர்மம்செய்ய என்னுவதற்கு ஏற்பட்ட அவசியம் என்ன என்பதை விளக்குகையில், தன்னை சில பதவிகளுக்கு ஜனங்கள் தேர்ந்தெடுத்ததினால், 1918-ல் தன்னிடம் ஜனங்களுக்கு அன்பு இருப்பதாய் அறிந்து இத்தருமம் செய்ய தீர்மானித்தாராம். அதாவது வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் இவரைத் தெரிந்தெடுக்காவிட்டால் இவரிடம் ஜனங்கள் அன்பு வைத்திருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கும் எண்ணம் என்னவாகும்? அதனால் இத்தருமம் செய்ய நினைத்திருப்பது என்னவாகும், என்பதை வாசகர்கள்தான் யோசிக்கவேண்டும்.

2. இதை வெளிப்படுத்தவே மூன்று வருஷமாயிற்றும். காரணம் 1924-ல் நஷ்டம், 1925-ல் அதைவிட நஷ்டம். 1926 ஆரம்பத்திலேயே, அதாவது நஷ்டம் ஈடேறாமல் இருக்கும்போதே இனியும் ஒத்திவைக்காமல் அதை வெளிப்படுத்திவிடவேண்டிய காரணம் ஏற்பட்டுவிட்டது. அதென்னவென்றால், வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களுக்காக வல்லாமல் வேறு என்ன காரணம் இருக்கக்கூடும். அப்படியானால் ஒரு தேர்தலுக்கு தர்மம்செய்ய நினைத்து மற்றொரு தேர்தலுக்கு அதை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. இதனின்று தர்மத்தின் தத்துவமறியலாம். இத்தர்மத்திற்காக ஒதுக்கிவைக்க தீர்மானித்த சொத்தின் மதிப்பு 2 லக்ஷம் பெறுமாம்; இதோடு இன்னமும் கொஞ்சம் ரொக்கமும் ஒரு வீடும் ஒதுக்க உத்தேசமாம். சீக்கிரம் சாசனம் பதிவுசெய்யப்படுமாம்; இதிலிருந்து எல்லாம் தீர்மானம், உத்தேசம், பதிவுசெய்யப்படும் என்கிற எதிர் காலத்திலிருக்கிறதே தவிர நடந்திருப்பது ஒன்றுமில்லை. ஆனால் அங்குரார்ப்பணத் திருவிழா (ஆரம்பக் கொண்டாட்டம்) மாத்திரம் நடந்தாய்விட்டது. "தமிழ் நாட்டுக் கர்ணன்" "பெரியதர்மம்" "இரண்டுதர்மங்கள்" "இந்தியாவின் தர்மம்" என்கிற தலைப்புகளுடன் பிராமணப் பத்திரிகைகளும், பிரசாரகர்களும், தர்மத்தில் பங்குபெற நினைக்கும் பிராமணரல்லாதப் பத்திரிகைகளும், பிரசாரகர்களும், எழுத்துப் பறையும், பிரசங்கப்பறையும் ஆரம்பித்தாய் விட்டது.

4. அந்த சாசனப்படி, எந்த சாசனப்படி? இனி செய்யப்போகும் சாசனப்படி, விடப்போகும் சொத்தில் கிடைக்கப்போகும் வருஷ வரும்படி ரூ. 10,000; இதை செலவு செய்யப்போகும் காலம் அடுத்த வருஷம்.

5. இந்த வருஷத்திற்கோ 10,000 செலவு செய்தாகிவிட்டது.

6. எப்படி செலவு செய்யப்பட்டிருக்கிறதென்றால்:—

(அ) கால்பங்கு கோவில்களுக்கும் மதக் காரியங்களுக்கும், அதாவது யாவரும்போய் தரிசிக்கமுடியாத கோவில்களுக்கும், பிராமணன் உயர்ந்தவன், அவனொழிந்த மற்றவர் சூத்திரர்-தீண்டாதவர் என்கிற வர்ணாசிரம மதத்திற்கும் செலவிடப்படும்.

(ஆ) மற்றொரு கால்பங்கு கீழ்தர வகுப்பிலுள்ள ஏழைகளுக்கு. அது யாரோ! ஓட்டு போடுகிறவர்களோ, ஓட்டு வாங்கிக்கொடுப்பவர்களோ இதற்கு பணம் வாங்குகிறவர்கள் தானே கீழ்தர வகுப்பாயிருக்கமுடியும். அதுவும் செலவிடப்படுமாம். எப்பொழுது? இவ் வருஷத்திற்கு முன்னமே செலவு செய்தாய்விட்டது!!

(இ) மற்றொரு பகுதி இந்த ஜில்லா கிராமங்களில் உள்ளவர்களுக்கு உதவி செய்யப்படும். அது எதற்காக? கிராமத்திலுள்ளவர்கள் போட்டி - போட்டுக்கொண்டு அய்யங்காருக்கு ஓட்டு போட ஓடிவருதற்கு! அதுவும் இவ்வருஷத்திற்கு செலவு செய்தாய் விட்டது!!

(ஈ) மற்றொரு கால்பங்கு கல்விக்கும் கைத்தொழிலுக்கும். என்ன கல்வி, என்ன கைத்தொழில் கடவுளுக்குத்தான் தெரியும் நூல் நூற்பதும் நெசவு செய்வதுமான தொழில் நம்ம அய்யங்காருக்கு ஆபத்து; ஏனென்றால், அவரே கான்பூர் காங்கிரசில் பேசும்போது தனது பணம் 3 லக்ஷம் நூற்கிற மில்லிலும், நெய்கிற மில்லிலும் போடப்பட்டிருப்பதாய் சொல்லியிருக்கிறார் ராட்டினமும் கைத்தறியும் ஏற்படுத்திவிட்டால் 3 லக்ஷம் ரூபாய் போட்ட யந்திரத்தை கொளுவடிப்பதா, கத்திசெய்வதா? ஆதலால் அதுவும் முடியாது. ஆனாலும் இவ்வருஷத்துக்கு செலவு செய்தாய்விட்டது!!

(உ) இப் பணங்களை எவ்வெவ்வழிகளில் செலவுசெய்வது என்பதைப்பற்றி டிரஸ்ட்டிகளே நிர்ணயிப்பார்களாம். இதினால் மேலே சொன்னதெல்லாம் அடிபட்டுப் போய்விட்டது.

(ஊ) அந்த டிரஸ்ட்டிகள் பதவிக்கோ இனிமேல் பல வகுப்பினரும் தெரிந்தெடுப்பார்களாம்! எந்த வகுப்பினர்? ஒருசமயம் வடகலை அய்யங்கார் வகுப்பினரும் தென்கலை அய்யங்கார் வகுப்பினராகவுமிருக்கலாம் அதுவும் யார் தெரிந்தெடுப்பவர்கள்? தெரிந்தெடுப்பை இன்னம் கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டுமானால் அய்யங்கார் புதல்வியும் மாப்பிள்ளையும் சேரலாம். இதுபோதாதா? இதுவும் போதாவிட்டால் 'சுதேசமித்திரன்' பத்திராதிபரான தனது சம்பந்தியை சேர்த்துக் கொள்வது; அடேயப்பா! விளங்குகிற தர்மத்திற்கு இது போதாதா? இதற்கு ஆதாரம் 'சுயராஜ்யா'விலேயே இருக்கிறது.

7. மறுபடியும் வேதாளம் முருங்கைமரத்திலேறியதைப்போல் பின்வரும் வருவாயை அதாவது தன்னுடைய தர்மசொத்திலிருந்து வரும் வரும்படியை எப்படி செலவிடவேண்டுமென்று தற்பொழுதே சொல்ல எவராலும் முடியாது (இதுதான் "இத்தர்மத்திற்கு" ஒரு காப்புத் திரவியம்; அதாவது பின்னால் தன்னிஷ்டப்படி யெல்லாம் சொல்லிக் கொள்வதற்கு ஒரு சௌகரியமான செக்ஷன் -பிரிவு) ஏனெனில் இனிமேல் (தெரிந்தெடுக்கப்போகும்) டிரஸ்ட்டிகளால் நிர்ணயிக்கப்படவேண்டிய விஷயம்.

பேர்ச்சு, போச்சு, இந்த பிரிவினால் எல்லாம் போச்சுது. மேலெழுதியதையெல்லாம் அடித்துவிட வேண்டியதுதான்.

இந்த சமயத்தில் ஒரு சின்ன கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது, ஓர் மாஜிஸ்ட்ரேட் கச்சேரிக்கு ஒரு அடிதடி பிராது வந்தது. அதில் ஒரு சாக்ஷியை விசாரிக்கும்போது அந்த சாக்ஷிபேரில் மாஜிஸ்ட்ரேட்டுக்கு கொஞ்சம் கண்ணுண்டு. (ஏனென்றால் அவன் அடிக்கடி இந்தமாதிரி சாக்ஷிக்கு வருகிறவன்) அவன் சாக்ஷிசொல்ல பெட்டிமேலேறியவுடன் ஊர், பெயர், தகப்பன் பெயர், ஜாதி, வயது முதலியவைகள் கேட்கப்பட்டவுடன் பிரமாணம் வாங்கப்பட்டது. அதாவது 'சர்வ வல்லமையுள்ள தெய்வத்திற்கு முன்பாக நான் சொல்லுவதெல்லாம் நிஜம்; நிஜம் தவிர வேறொன்றுமில்லை' என்று சொன்னான். இது சொன்னவுடன் மாஜிஸ்ட்ரேட் சாக்ஷியைப்பார்த்து உண்மை 'சொல்லவேண்டும்' பத்திரம், அப்புறம் தெரியுமா என்று மிரட்டினார்; சாக்ஷி பார்த்தான்; எஜமானரே காதில் கேட்டதை சொல்லட்டுமா, கண்ணில் பார்த்ததை சொல்லட்டுமா என்று மிகுந்த பயபக்தியோடு கேட்பவன்போல் கேட்டான். மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரதோரணையில் கண்ணில் பார்த்ததைத்தான் சொல்லவேண்டும் காதில் கேட்டதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஊரில் என்னஎன்னமோ பேசிக்கொள்ளுவார்கள் அதையெல்லாம் நம்பி ஒரு காரியம் செய்ய முடியாது என்று சொன்னார். சாக்ஷி உடனே மாஜிஸ்ட்ரேட் காலில் விழுந்து எஜமானரே நான் முன்னே சொன்னதெல்லாம் தப்புசெய்து அழித்துவிடுங்கள். என் தகப்பனார் யார் என்பதும் நான் கண்ணில் பார்த்ததில்லை. எந்த ஜாதியில் பிறந்தவன் என்பதும் கண்ணில் பார்த்ததில்லை. இதெல்லாம் பிறத்தியாரால் கேள்விப்பட்டதுதான் என்று கெஞ்சினான். மாஜிஸ்ட்ரேட் அதைப்பற்றி கவலையில்லை மற்றதைப்பற்றிச் சொல் என்றார். சாக்ஷி வேண்டாம், வேண்டாம், சர்வ வல்லமையுள்ள தெய்வத்திற்கு முன்பாக என்று சத்தியம் செய்தாய்விட்டது; கண்ணில் பாராத சங்கதியையும் நமக்கு முழுதும் நிஜம் என்று தெரியாத சங்கதிகளையும் சொல்லமுடியாது என்று வாதாடினான்: கதையில் இன்னும் சில விஷயம்வரும் அது இந்த வியாசத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல. அதுபோல் நமது அய்யங்காரின் தர்ம சாசனமும் அதாவது தன்னை நம்புவதாயிருந்தால் தான் சொல்வதையெல்லாம் கேட்கவேண்டும். நம்பாவிட்டால் டிரஸ்ட்டிகளைத்தான் கேட்கவேண்டும்; தனக்கு ஒன்றும் தெரியாது என்பதுபோலிருக்கிறது.

8. டிரஸ்ட்டிகளைத்தான் கேட்க வேண்டுமென்று முடிவாகச் சொல்லிவிட்டால் தன்னிடம் யாரும் வராவிட்டால் என்ன செய்கிறது என்று அதற்காக மறுபடியும் தற்பொழுதும் பல தர்ம காரியங்களுக்கு பணம் உதவப்படும், அதாவது, 6 இராப்பள்ளிக்கூடம், ஒரு பெண் பாடசாலை, ஒரு பெண் பள்ளிக்கூடம் (பாடசாலைக்கும் பள்ளிக்கூடத்திற்கும் என்ன வித்தியாசமோ; அது அய்யங்கார் அகராதியைத்தான்பார்க்கவேண்டும்) ஒரு இலவச வாசகசாலை! அதற்கு வரும் பத்திரிக்கைகள் எல்லாம் அய்யங்கார் கோஷ்டியாரும் அய்யங்காரிடம் பணம் வாங்குபவர்களும் போடும் பத்திரிகைகள் தான் வரவேண்டும் என்கிற கருத்தோ, என்னமோ.

அப்புறம் ஏழைகளுக்கு அடிக்கடி அன்ன மளிப்பது. ஓட்டு சம்பாதிக்கும் கிராமப் பிரசாரகர்கள் கோயமுத்தூருக்கு வருவதால் அவர்களுக்கு சாப்பாடு போடவேண்டாமா? அதற்காக தனது வீட்டில் டிரஸ்ட்டிகள் உள்பட அன்னசத்திரம்.

9. இவ்வளவும் போதாமல் இன்னும் ஒரு பெரிய விளம்பரம். அதாவது, தேசிய வேலை செய்யும் சில தமிழ் பத்திரிகைகளுக்கும் பொருளுதவிசெய்ய உத்தேசங்கொண்டுள்ளேன் என்பது. இது எந்த முறையில் டிரஸ்ட்டி முறையிலா? அப்படியானால் இவருக்கு அதிகாரமேயில்லை. இந்த வருஷத்திற்கு செய்தும் ஆய்விட்டது! ஒரு சமயம் சட்டசபை அபேக்ஷகர் முறையிலோ வென்றால் அது வேறே தர்மம், இதில் சொல்ல வேண்டியதில்லை. அந்த ரகசியம் நமக்கு சுலபத்தில் தெரியாது. இப்பொழுது அதை சொல்லவும் கூடாது. பத்திராதிபர்களின் விண்ணப்பங்கள்வந்த பின் மேல்பார்த்துக் கொள்ளலாம்:—

10. இவ்வளவும் அல்லாமல் கிராமங்களில் சில உருவான வேலைகளைச்செய்ய உத்தேசித்திருக்கிறார். அதற்கு பிரசாரகர்கள் யோக்கியர்களாய்க் கிடைத்தால் மாத்திரம் பணம் கொடுக்கப்படுமாம். ஆனாலும் சுப்பிரி என்கிற ஒரு யோக்கியரின் ஊழியம் மாத்திரம் இப்போது அவருக்குக் கிடைத்திருக்கிறதாம். கிராமத்தில் உருவான வேலை என்ன? அய்யங்கார் தர்மப்பிரபு, கலியுக கர்ணன், பஞ்ச நிவாரண வேலை செய்தவர், பருத்திச்செடி பிடுங்குவதை நிறுத்தினவர், ஓட்டு கொடுத்தால் அதற்கு பதிலாக பெரிய தர்மம் செய்வார் பாலங்கட்டிக்கொடுப்பார் என்று சொல்லக்கூடியவர்கள் வேண்டும். அதுவும் இரகசியம். விண்ணப்பங்கள் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம். இந்த கோலாகல திருநாளுக்கு வந்த ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் ஏமாந்து போனதையும் தான் வெட்கப் பட்டதையும் சுதேசமித்திரன் ரிபோர்ட்டருக்கு எழுத முடியவில்லையோ, எழுதினதை பத்திரிகையில் போடவில்லையோ விசாரித்தது பாக்கி விஷயத்தையும் தெரிந்துவிட்டுப்போனதையும் சேர்த்து மறுபடி சாவகாசப்பட்டபோது எழுதுகிறேன்.

---

## கதர் மஹாநாடு.

சிக்கல். (நாகை தாலூகா)

சிக்கலிலுள்ள ஊழியர் கழகத்தில் கதர் வளர்ச்சி விஷயமாக கூடும் பெருங்கூட்டத்தில் "குடி அரசு" ஆசிரியர் ஈரோடு உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் வைகாசி ஞாயிறு 10-ம் நாள் (மே-மீ 23-ம் தினத்தில்) தலைமை வகிப்பார்கள். அதுகாலை கல்வி அறிவிற்சிறந்த அறிஞர்கள் அரிய பொருள் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என கழக அமைச்சர் அறிவிக்கிறார்.

# தீண்டாமையைப் பற்றி

## ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களின் பிரசங்கம்.

### சிராவயல் காந்தி வாசக சாலையின் ஆண்டு நிறைவு விழாவும் காந்தி கிணறு திறப்பு விழாவும்.

ஸ்ரீமான், ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்கள் 6—4—26-உ மாலை 5 மணிக்கு ஸ்ரீமான்கள் பி. ச. சுப்பிரமணியச் செட்டியார், ராய. சொக்கலிங்கச் செட்டியார், வ. ராமசாமி அய்யங்கார் முதலியவர்களுடன் காரைக்குடியிலிருந்து காலை 9 மணிக்கு வந்ததும், வாத்திய கோஷத்துடன் ஆதிதிராவிடக் குழந்தைகளுக்காக ஸ்ரீமான். கும்பலிங்கம் பிள்ளைமேல் பார்வையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காந்தி ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு ஆதிதிராவிடர்களுக்கென்று காங்கிரஸ் பொருளுதவியால் வெட்டப்பட்டிருக்கும் காந்தி கிணற்றைத்திறந்து வைத்ததும் ஆச்சிரமத்தின் சார்பாகவும் ஆதிதிராவிட மாணவர்கள் சார்பாகவும் நல் வரவேற்புப் பத்திரங்கள் அளிக்கப்பெற்றன. காந்தி கிணற்றை திறந்து வைக்கும்போது ஸ்ரீமான் நாயக்கர் பேசியதன் சுருக்கமாவது:—

"இந்தக் கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையை, ஒரு பெருமை யெனக்கருதி நீங்கள் எனக்களித்திருந்தாலும் உண்மையில் எனக்கு அதைத் திறந்து வைக்கக் கொஞ்சமும் மனமில்லை. அல்லாமலும் இதை ஒரு சிறுமையாகவே மதித்து மிகுந்த சங்கடத்துடனேயே இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுகிறேன். ஆதிதிராவிடர்களுக்கென்று தனிக் கிணறுகள் வெட்டுவது அக்கிரம மென்பதே எனது அபிப்பிராயம். இவ்வாறு தனிக்கிணறுகள் வெட்டுவது, ஆதிதிராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள், அவர்கள் நம்முடன் கலக்கத் தக்கவர்களல்ல என்று ஒரு நிரந்தரமான வேலியும் ஞாபகக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அருத்தமாகும். எதற்காக அவர்களுக்குத் தனிக் கிணறு வெட்டவேண்டும். சிலர் ஆதிதிராவிடர்களுக்கு நன்மை செய்வதாக வேஷம் போட்டு தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிலை நிறுத்திக்கொள்ளத்தான் இவ்வித தர்மங்கள் உதவும். நமது கிணறு குளங்களில் ஆதிதிராவிடர்களை ஏன் தண்ணீர் எடுக்க அனுமதிக்கலாகாது? பக்ஷிகளும் மிருகங்களும் குளங்களில் தண்ணீர் சாப்பிடுவதில்லையா? குளங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா? அதில் என்ன என்ன வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா? இவ்விதத் தண்ணீரை இந்த ஆதிதிராவிடர்கள் எடுத்து சாப்பிட்டுவிடுவதனால் என்ன கெடுதி ஏற்பட்டுவிடும்," என்று சொல்லிவிட்டு வரவேற்புப் பத்திரங்களுக்கு ஸ்ரீமான். நாயக்கர் அளித்த பதிலாவது:—


"நீங்கள் எனக்களித்த வரவேற்புப் பத்திரத்தில் உங்களுக்காக நான் அதிக வேலை செய்திருப்பதாகச் சொல்லிப் புகழ்ந்திருக்கிறீர்கள். அது கொஞ்சமும் உண்மையல்ல. உங்களை உத்தேசித்து நான் ஒரு காரியமும் செய்யவேயில்லை. ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்கு உழைப்பதாய் நினைத்துக்கொள்வது ஆதிதிராவிடர்களுக்கு உழைப்பதாய்ச் சொல்லுவதும், வேஷத்திற்காகத்தான் உழைக்கிறவர்களும் பேசுகிறவர்களுமாயிருப்பார்களென்பது எனது அபிப்பிராயம். அதாவது இந்தியாவின் நன்மைக்காக ஐரோப்பியர்கள் இந்தியாவை ஆளுகிறார்கள் என்பது போலத்தான் ஆகுமே யல்லாமல் வேறல்ல. நான் அப்படி நினைக்கவேயில்லை.

'பறையர்' என்கிற ஒரு ஜாதிப் பெயர் நம் நாட்டிலிருப்பதால்தான் 'சூத்திரர்' என்கிற ஒரு ஜாதிப் பெயர் நம் நாட்டிலிருக்கிறது. 'பறையர்' என்கிற ஜாதிப் பெயரைவிட 'சூத்திரர்' என்கிற ஜாதிப் பெயர்மிக்க இழிவானது. இந்து சாஸ்திரப்படி, பறைய ஸ்திரீகளில் பதிவிரதைகளுக்கும் சரியான ஒரே தாயுக்கும்,தகப்பனுக்கும்பிறந்தவர்களுமிருக்கலாம். 'சூத்திரர்'களில்அப்படி இருக்க இடமேயில்லை. ஏனென்றால் "சூத்திரச்சி" என்றால் தாசி, வேசி என்றுதான் பொருள். 'சூத்திரன்' என்றால் தாசி மகன், வேசி மகன் என்றுதான் பொருள். இதை ஒப்புக் கொள்ளாதவன் இந்து ஆகமாட்டான் என்பது சாஸ்திர சம்மதம். ஆகையால் என் போன்ற 'சூத்திரன்' என்று சொல்லப்படுபவன் 'பறையர்கள்' என்று சொல்லப்படுவோர்களுக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம், 'சூத்திரர்கள்' என்று தம்மை யாரும் கருதக் கூடாது என்பதற்காகத்தானே யல்லாமல் வேறல்ல. ஆகையால் எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய் தோன்றுகிறது. உங்களைத் தாழ்மையாய்க் கருதும் ஸ்திரீகளும் புருஷர்களும், தாங்கள் பிறரால் உங்களைவிடக் கேவலமாய்-தாழ்மையாய்க் கருதுவதை அறிவதில்லை. அந்நியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையால், தங்களை மற்றவர்கள் தாழ்மையாய் நினைப்பது தங்களுக்கு ஈனமாய்த் தோன்றுவதில்லை.

"இந்த லக்ஷணத்தில் உங்களிடம் தப்பிதங் கண்டு பிடித்து, 'உங்கள் உடம்பில் துர்வாடை அடிக்கிறது, நீங்கள் ஸ்நானம் செய்வதில்லை, துணி துவைப்பதில்லை, மாட்டு மாமிசம் சாப்பிடுகிறீர்கள், மதுவருந்துகிறீர்கள், இதை விட்டுவிடுங்கள்,' என்றுஞானோபதேசம் செய்கிறார்கள். நீங்கள் வேஷ்டி துவைக்காமலும் குளிக்காமலும் இருப்பதற்கு யார் ஜவாப்தாரி என்பதை அவர்கள் உணருவதில்லை. உங்களுக்குக் குடிக்கவே தண்ணீரில்லை யென்றால் குளிப்பதெப்படி, வேஷ்டி துவைப்பதெப்படி? அழுக்கும் நாற்றமும் உங்கள் கூடவே பிறந்ததா என்று கேட்கிறேன். குளிக்கவும், வேஷ்டி துவைக்கவும், பல் துலக்கவும் தண்ணீர் கொடுக்காமல், மகந்துகள் என்போரையும், சங்கராச்சாரிகள் என் போரையும், கொண்டுவந்து வீட்டிலடைத்து வைத்துவிட்டால் அவர்கள் துணி அழுக்கில்லாமல் இருக்குமா? அவர்கள் உடம்பும், வாயும் நாற்றமடிக்காமலிருக்குமா யென்று யோசித்துப் பாருங்கள் நாமே ஒருவனை பட்டினிபோட்டுவைத்து. அவன் இறந்துபோன பிறகு, பட்டினியினால் இறந்து போய்விட்டான் பாவி என்று சொன்னால், யார் 'பாவி' யென்பதை நினைத்துப் பாருங்கள்.

"அல்லாமலும், மாடு தின்பதும் மதுவருந்துவதும், நீங்கள் 'பறையர்' களாயிருப்பதற்குக் காரண மென்று சொல்வது கொஞ்சமும் யோக்கியமான காரியமல்ல. மாடு சாப்பிட்டுக்கொண்டும் மதுவருந்திக்கொண்டுமிருக்கிறவர்கள்தான் இப்பொழுது உலகத்தையே ஆண்டு கொண்டிருக்கிறார்கள். தவிரவும், நீங்கள் மாடு சாப்பிடுவதன் குற்றம் உங்களைச் சேர்ந்ததல்ல. உங்களை மற்றவர்களைப்போல சரியானபடி சம்பாதிக்கவும், தாராளமாய் சாப்பிடவும், தெருவில் நடக்கவும், தாராளமாய் எங்கும் போய் வேலைசெய்து சம்பாதிக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டதால் கொஞ்சப் பணத்தில் அதிக ஆகாரம் ஆகக் கூடியதான மாட்டு மாமிசத்தைப் புசிக்கவேண்டியதாயிற்று. மாட்டு மாமிசத்தை அனுமதிக்கும் மதத்தைச் சேர்ந்த மகமதியரிலும், கிறிஸ்துவரிலுங்கூட சிலர் கைப்பணம் தாராளமாய்க் கிடைப்பதாயிருந்தால், நாங்கள் மாட்டு மாமிசம் சாப்பிடுகிற வழக்கமில்லை யென்று சொல்லுகிறார்கள். ஆதலால் நமது நாட்டார் மாட்டிறைச்சி சாப்பிடுவதற்கு தரித்திரந்தான் முக்கிய காரணம். அல்லாமலும், மாட்டு மாமிசம் சாப்பிடுவது ஆடு, கோழி, மீன், பன்றி இவைகளைவிட என்ன அவ்வளவு அதிகமான பாவமாய்ப் போய்விட்டது. கோழியும், மீனும், பன்றியும், எச்சலையும் பூச்சி புழுக்களையும், அழுக்குகளையும், மலத்தையும் சாப்பிடுகிறது. இப்படி யிருக்க இதைச் சாப்பிடுகிற வட நாட்டு 'பிராமணர்கள்' முதல் தென்னாட்டு 'சூத்திரர்கள்' வரை, நல்ல ஜாதியாயும் தொடக்கூடியவர்களாயுமிருக்கும் போது, புல்லும் பருத்திக் கொட்டையும் தவிடும் புண்ணாக்கும் சாப்பிடுகிற மாட்டிறைச்சி சாப்பிடுவதனால் மாத்திரம் எப்படி ஒரு மனிதன் தாழ்ந்தவனாவான். அப்படிப் பார்த்தாலும் மாடு சாப்பிடுகிறவர்களை யெல்லாம் 'தொடாதே', 'தெருவில் நடக்காதே,' 'குளத்தில் தண்ணீர் சாப்பிடாதே,' 'ஊருக்குள் குடியிருக்காதே,' என்று சொல்லுகிறார்களா? இது வீணாய், வேண்டு மென்றே உங்களைத் தாழ்த்தி வைப்பதற்காகச் சொல்லும் ஒரு யோக்கியப் பொருப்பற்ற காரணமே யல்லாமல் உண்மையான காரணமல்ல என்பதுதான் எனது முடிவு. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ள வேண்டும் என்பதை நான் ஆக்ஷேபிக்கவரவில்லை. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ளினால்தான் உங்கள் ஜாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரணத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஜாதி உயருவதற்காக மதுவையும் மாட்டு மாமிசத்தையும் விடுங்களென்று கேட்க மாட்டேன். அதற்காக நீங்கள் விடுவதும் அவ்வளவு அவசிய மில்லை. நம் நாட்டில் தென்னை பனை மரங்களில் வரும் கள்ளும் காய்ச்சும் சாராயமும் வெளி நாடுகளிலிருந்து வரும் சாராய தினுசுகளும் சென்னை மாகாணத்தில் மாத்திரம் சுமார் 15, 20-கோடி ரூபாய் பெரும்படியானதையெல்லாம் நீங்களேவா

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்பார்க்க).



அலைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

# குடி அரசு.

அக்ஷய-ஹு சித்திரை-மீ ௰௩-உ.

## ராஜியின் பலன்.

### சுயராஜ்யக் கக்ஷியின் கதி.

"பயித்தியம் தெளிந்து போய்விட்டது, உலக்கை எடுத்துக்கொண்டுவா கோவணங் கட்டிக்கொள்ளுகிறேன்," என்று ஒரு பழமொழியுண்டு.

அதாவது, ஒரு வாலிபனுக்குப் பெண்ணாசையால் பயித்தியம் பிடித்திருந்தது. அவன் கோவணமுமில்லாமல் நிர்வாணமாய்த் திரிந்துகொண்டிருப்பது வழக்கம். அதனால் ஜனங்கள் அவனைப் பிடித்து விலங்கிட்டு ஒரு அறையில் மூடி வைத்திருந்தார்கள். கொஞ்சநாள் பொறுத்து அவ்வாலிபன் தனக்கு "பயித்தியம் தெளிந்துவிட்டது, உலக்கை எடுத்துக்கொண்டு வாருங்கள், அதைக் கோவணமாகக் கட்டிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னானாம். அதுபோல் நமது ராஜியக் கக்ஷிகளுக்குள் ராஜி ஏற்பட்டுப்போய்விட்டதாம்; காங்கிரசுக்கும் நல்ல காலமாம்; தங்கள் கக்ஷிக்கும் இனிமேல் குறைவில்லையாம்; இனி எல்லோரும் ஒத்து வேலை செய்யவேண்டியதுதான் பாக்கியாம்; என்பதாக இன்னும் என்னென்னவோ எழுதி பிராமணப் பத்திரிகைகள் ஏமாற்றுப் பிரசாரம் செய்கின்றன. பயித்தியம் தெளிந்ததாகச் சொல்லுபவன் எப்படி உலக்கையைக் கோவணங்கட்டிக் கொள்ளலாம் என்று நினைத்தானோ அதே போல் சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரி வேலை ஒப்புக்கொள்வதைக் 'காங்கிரஸ் கட்டளைப்படி நடப்பது' என்று தீர்மானித்து ராஜியாய்விட்டார்கள். இதிலிருந்து என்ன விளங்குகிறது? மந்திரி வேலையைப்பெறும் ஆசையை மனதில் வைத்துக்கொண்டு, சட்ட சபையில் 'ஒத்துழையாமை' என்றும், 'உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதில்லை' என்றும், 'முட்டுக்கட்டை' என்றும் சொல்லிக்கொண்டு ஓட்டர்களை ஏமாற்ற நினைத்த தந்திரமும், இரகசியமும் இப்போது வெளியாய்விட்டது, முதலில் ஒத்துழையாதாரயிருந்து, சட்ட சபைக்குள் 'ஒத்துழையாமை, முட்டுக்கட்டை' என்று மாறி, கடைசியாய் பரஸ்பர ஒத்துழைப்பாளருடன் ராஜி செய்துகொள்ளுவதென்கிற சாக்கை வைத்துக்கொண்டு மந்திரி வேலை கிடைத்தால் ஒத்துழைப்பது. இல்லாவிட்டால் அப் பதவி கிடைக்கும் வரையில் 'ஒத்துழையாமை, முட்டுக்கட்டை' என்று சொல்லிக் கொண்டிருப்பது என்கிற ராஜிக்கு வந்தாகிவிட்டது. சுயராஜ்யக் கக்ஷியின் உள் குட்டை வெளிப்படுத்திய பெருமை ஸ்ரீமான் ஜெயகருக்குத்தான் சேரவேண்டும்.

இந்த ராஜியின் பலனை, ஐரோப்பிய மகா யுத்தத்தில் 14 நிபந்தனைகள் ஏற்படுத்தின அமெரிக்கா பிரசிடெண்ட் வில்சன் துரைக்கிருந்த பெருமை, இப்போது எலெக்ஷன் உலகத்தில் ஸ்ரீமான் ஜெகருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஐயோ பாவம்! தலைவர் பண்டித நேருவும் அவரின் வாலான ஸ்ரீமான் ரெங்கசாமி ஐயங்காரும் ஸ்ரீமான் ஜெயக்கார் பெயரை சொல்லித்திரிய வேண்டிய வேலை ஏற்பட்டு விட்டது. இனி இவர்கள், ஆடுகளுக்கு எவ்வித உபயோகமுமில்லாமல் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 'தாடி' என்று சொல்லக் கூடிய இரண்டுமாமிசத்துண்டுகளைப்போல், ராஜீய உலகத்தில் எவ்வித பிரயோஜனமுமில்லாமல் இவ்விரண்டு பிராமணர்களும் ஆகிவிட்டார்கள். ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கோ வயிற்றுக் கடுப்புதான் ஏற்பட்டிருக்கும். அடுத்த காங்கிரஸுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே பிரசிடெண்டாகலாம் என்று நினைத்திருந்தார். அவரின் சிஷ்யர்களான பிராமணப் பத்திரிகைளும் 'நமது சொந்த நிருபர்' என்கிற பெயரால் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தன. முன் ஒரு காலத்தில், ஸ்ரீமான் திலகர் இறந்தவுடன், 'இனி இந்தியாவுக்குத் திலகர் லோகமானிய சீனிவாசய்யங்கார்தான்' என்று "இந்து"ப் பத்திரிகை முதல் எல்லாப் பிராமணப் பத்திரிகைகளும் தம்பட்டம் அடித்து வந்தன. கடைசியாய் காந்தி வந்ததும் ஐயங்கார் கொஞ்ச காலம் அஞ்ஞாதவாசம் செய்யவேண்டியதாயிற்று. அதுபோலவே மகாத்மா காங்கிரசை விட்டு ஒழிந்ததும் மறுபடியும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை அந்த இடத்தில் இருத்த பிராமணப் பத்திரிகைகள் பாடுபட்டன. ஐயங்காரின் துரதிர்ஷ்டத்தால் இப்போது ஜெயக்கர் முளைத்துவிட்டார். இனி ஐயங்காருக்கு காங்கிரஸ் பிரசிடெண்டு பதவி கிடைப்பது சந்தேகந்தான்.

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப்பற்றி ஒரு நண்பர் நம்மிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். அவர் "ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பிரசாரத்தைப்பற்றி என் நீங்கள் மிகுதியும் கவலையெடுத்துக் கொள்ளுகிறீர்கள்... அவருடைய ஜாதகக்குறிப்பே 'அவர் தொட்டது துலங்காது' என்று இருக்கிறது. ஐயங்கார் தடபுடலெல்லாம் அவர் பணம் செலவு செய்கிற வரையில்தான். செலவு நின்றதும் தானாகவே அமர்ந்து விடுவார். இதுவரையில் அவர் ஏதாவது ஒரு காரியத்தில் முடிவான வெற்றி அடைந்திருக்கிறாரா? அவர் பின்னால் திரியும் சிஷ்யகோடிகள் அவரை தலைவர் தலைவர் என்று சொல்லிக் கொண்டு திரிவதோடு சரியாய்ப் போய் விடும்," என்று சொல்லுவது வழக்கம் அதுபோலவே நடந்துவருகிறது.

முதலாவதாக நமது ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு சென்னை சட்டசபையில் தன் கக்ஷியான சுயராஜ்யக் கக்ஷி உருப்படும் என்கிற நம்பிக்கையே யில்லாமல் போய்விட்டது. இதுவரை அவர்கூட சேர்ந்திருக்கும் ஆள்களெல்லாம் "ஜஸ்டிஸ்" கட்சியிலிருந்து பார்த்து உத்தியோகம் கிடைக்காமல் வெளியே வந்தவர்களும் "ஜஸ்டிஸ்" கக்ஷியில் நீக்கப்பட்ட அதன் விரோதிகளுமே தவிர வேறு எவராவது புதிதாக சேர்ந்திருக்கிறார்களா? "ஜஸ்டிஸ்" கக்ஷியார் பழயபடி ஏதாவது கொடுப்பதாகச் சொன்னால், போவதில்லை என்று சொல்லக்கூடியவர்கள் எவராவது இருக்கிறார்களா என்பது அவருக்கே தெரியும். அல்லாமலும் இவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு ஸ்ரீமான் முதலியார் போன்றவர்களைப் பின்னால் இழுத்துக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்தும், இம்மாதம் 18-உ. சட்டசபைகளுக்கு ஆள்களை நிறுத்துவதற்கென்று சென்னை மகாஜன சபைக் கட்டிடத்தில் போட்ட நிர்வாகக் கூட்டத்தின் ரகசியம் 8 நாளாகியும் இன்னும் வெளிவாவில்லை. "திராவிடன்" பத்திரிகையில் மாத்திரம் கொஞ்சம் வெளிவந்திருக்கிறது. நிறுத்த ஆளில்லாமல் இவர்கள் படும் கஷ்டம், கடவுளுக்குத்தான் தெரியும்.

இதிலிருந்தே சுயராஜ்யக் கக்ஷியின் யோக்யதையும் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரின் பணம் செலவானதின் பலனும், முதலியார் தலைமையின் பலனும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். இதன் பலனைத்தான் ஸ்ரீமான். அய்யங்கார் சென்னை சட்ட சபைக்கு நின்றால் தனக்கு ஆகுமோ ஆகாதோ என்று பயந்தும், பிராமண ஓட்டுகளே நிறைந்த யூனிவர்சிட்டி ஸ்தானத்திற்குதான் நிற்பதானால் சென்னை சட்ட சபையில் அடிக்கடி வாயாடித்தனம் செய்யக் கூடிய ஸ்ரீமான். சத்திய மூர்த்திக்கு வேறு கதியென்ன வென்று நினைத்தும், சென்னையில் மந்திரி வேலையை எதிர்பார்ப்பது குழந்தை அம்புலியைக் கையில் பிடிக்க ஆசைப்படுவது போலாகுமென்று கருதி, சென்னை சட்ட சபை ஆசையையும் விட்டு இந்தியா சட்ட சபைக்குத் தலைவராகப் பார்த்தார். அங்கும் ஸ்ரீமான், ஜெயக்கர் முளைத்துவிட்டார். இனி யென்ன செய்வார் பாவம்! நேருகளும் ஐயங்கார்களுமே இக்கதியாகிவிட்டால், இவர்கள் பெற்றெடுத்த சுயராஜ்யக் கக்ஷி அழிந்துவிட்டதா இல்லையா என்று கூட கேட்கவேண்டுமா? நமக்கு அதைப் பற்றிக்கூட அதிக பரிதாபமில்லை. இனி ஐயங்கார் அவர்களின் வலக்கை இடக்கைகளான ஸ்ரீமான்கள். முதலியார்கள் கதியும் நாயுடுகள் கதியும் என்ன ஆகுமென்பதும் இவர்களை நம்பி அக் கக்ஷியில் சேர்ந்த மற்றவர்கள் கதி என்ன ஆகும் என்பதும் தான் நமது பரிதாபம். அம்மிக்கல் போன்ற இவர்களே ஆகாசத்தில் பறக்கும்போது மற்றவர்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? வாசகர்களே தெரிந்துகொள்ளலாம்.

# திரு ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார்.

அஷ்டதிக்குப் பாலகர்களான ஐயங்கார் கோஷ்டியார் சமீபத்தில் தமிழ்நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து வரும்போது திரு ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களை பல கேள்விகளால் தூத்துக்குடியிலும், திருச்சியிலும் வளைத்துக்கொண்டார்கள். அக்கேள்விகளுள் முக்கியமான இரண்டிற்கு உண்மையிலே தன்னுள்ளத்திலே உறையும் அபிப்பிராயத்தை வெளிப்படையாய்க் கூறி விட்டார். அவை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றியும் ஹிந்துமத பரிபாலனச் சட்டத்தைப்பற்றியுமாகும்.

திரு. ஷண்முகஞ் செட்டியார் இவற்றிற்குப் பதிலளிக்கு முகத்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவமே நாட்டின் அமைதியைக் காக்கவல்லதென்றும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காகக் காங்கிரசிலும் போராடப்போவதாகவும் கூறியுள்ளார். மத பரிபாலனச் சட்டத்தைப்பற்றிக் கூறும்போது இச் சட்டம் அருமையான தொரு சட்டமென்றும், சட்ட சபையில் இச் சட்டம் நிறைவேற்றப் பெறுதற்குத் தன்னுடைய உதவியையும் அக்காலத்தில் கொடுத்திருப்பதாகவும், இனி காங்கிரசோ அல்லது மற்றையோர்களோ அச் சட்டத்தை அழிப்பதற்கு முற்பட்டால் தன்னுடைய முழு பலத்தையும் செலுத்தி அச்சட்டத்தை நிலைநாட்ட முயலுவேன் என்றும் திரு. செட்டியார் விடையிறுத்துள்ளார். இவ்வாறு தன்னுள்ளத்திலே உறையும் எண்ணத்தைத் தைரியமாய்க் கூறியது ஆச்சரியத்தைக் கொடுக்காது. ஐயங்கார் கோஷ்டியில் சேர்ந்து தாளம்போடும் உண்மைத் தமிழர் பலருக்கும் இத்தகைய கொள்கையே உண்டென்பதை நாம் தனித்துத் தெரிந்துகொண்டிருந்து அறிவோம். ஆனால் திரு. ஷண்முகஞ் செட்டியாரைப் போன்று மற்றையோர் தைரியமாய் வெளியில் எடுத்துக் கூறப் பின்வாங்குவதற்குக் காரணமில்லாமலில்லை. திரு. ஷண்முகஞ்செட்டியார் சுயராஜ்யக்கட்சியில் சட்டசபை அபேக்ஷகராய் நிற்பினும் அவருக்கு பார்ப்பனர் உதவி வேண்டியதேயில்லை. ஐயங்கார் கோஷ்டியின் எத்தகைய உதவியுமில்லாமலேயே யெல்லாம் நடக்கும் ஆதலினாலேயே வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான சட்டத்தையும் தைரியமாய் ஆதரிக்கத் தலைப்பட்டார்.

ஆனால் அய்யங்காரைச் சுற்றி வரும் மற்றையோரோ, பாவம்! கோழைகள்-காலில் பலமில்லாதவர்கள்-முதுகெலும்பில்லாக் கூனிகள். இவர்கள் நடப்பதற்கும் நிமிர்வதற்கும் ஐயங்கார் கோஷ்டியை எதிர் நோக்க வேண்டியவர்கள். பத்திரிகை நடத்துவோருக்கு அக்கோஷ்டியின் உதவியும் ஆதரிப்பும் இல்லாவிடில் பத்திரிகை அடங்கி ஒடுங்கிவிடும். சட்டசபைக்கு நிற்போருக்கும் அப்படியே. வேறு பலருக்கும் அவ்வத் துறையில் வெவ்வேறு வகையிலேயே அக் கோஷ்டியின் ஆதரிப்பு வேண்டியதாகிறது. இதற்காக தங்களது மனச் சாட்சியையும் கௌரவத்தையும் இழந்துவருவதோடல்லாமல் தங்களுக்குமட்டுமல்லாது தங்கள் பின் சந்ததிகளுக்கும் குழிதோண்டிக் கொண்டவர்களாகிறோமென்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

திரு. ஷண்முகஞ் செட்டியாரல்லாது வேறு எவராலேனும் இவ்வாறு சொல்லப்பட்டிருக்குமானால் இதுவரை, அவர் 'மாரீச'னாகவும், "தேசத் துரோகி"யாகவும் மாறியிருப்பார். ஆனாலும் பார்ப்பனப் பத்திரிகைகள் தத்தம் ஜாதிப்புத்திப்படியே நடந்துவருகின்றன. தூத்துக்குடியிலும், திருச்சியிலும், மேற்கண்ட இரு முக்கிய விஷயங்களையும் திரு. ஷண்முகஞ் செட்டியாரால் ஸ்பஷ்டமாக எடுத்துக் கூறப்பட்டிருந்தும் உண்மைக்கு மாறாக பாமரரை ஏமாற்றும் வழியில் அவைகளைப் பிரசுரிக்காமல் மறைத்துவிட்டது சின்னத்தன்மேயாகும். இவ் விஷயத்தை "திராவிடன்" ஒன்றே தெளிவாகக் கூறியது; ஆதலால் உண்மை எங்கிருக்கிறதென்பதை பொதுஜனங்களையே அறிந்து கொள்ள விட்டுவிடுகிறோம்.

# சபர்மதி ராஜி.

சபர்மதி ஆச்சிரமத்தில் மகாத்மா காந்தி முன்னிலையில் சுயராஜ்யக் கக்ஷிக்கும் பரஸ்பர ஒத்துழைப்புக் கக்ஷிக்கும் ராஜி ஏற்பட்டுவிட்டதாம். ஆனால் மகாத்மா அதில் கலந்து கொள்ளவே கிடையாது. மகாத்மா காந்திக்கு முன்னிலையில் சபர்மதி ஆச்சிரமத்தில் ராஜி யேற்பட்டு விட்டதென்று சொன்னால் அதில் ஒரு பெருமையும், பொது ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கையும் ஏற்பட்டு விடுமென்ற எண்ணத்தினால் செய்த சூழ்ச்சியே யல்லாமல் வேறல்ல. ராஜியால் விளைந்த பலன், நாளுக்கு நாள் நகர்ந்து திடீரென்று அம்மானே என்றபடி சுயராஜ்யக்கக்ஷியார் உத்தியோகம் ஒப்புக்கொள்வதுதான். அதாவது "மந்திரிகள் தங்களுடைய கடமைகளைச் சரியாக நடத்துவதற்கு அவசியமான அதிகாரம், பொறுப்பு, சுயமாகச் செய்வதற்குச் சக்தி முதலியவை கொடுக்கப்பட்டால் கெவர்ன்மெண்டு போதுமான அளவு இணங்கிவிட்டதாகக் கருதி சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்ளலாம். மந்திரி பதவிக்கு அவ்வித பொறுப்பும் சுதந்திரமும் கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்கிற விஷயம் அந்தந்தமாகாண சட்டசபை மெம்பர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டியது. திரு. ஜெயகரும் திரு. நேருவும் இதை ஊர்ஜிதம் செய்யவேண்டியது.

ஒப்பம்;—

சரோஜனி நாயுடு, மோதிலால் நேரு, லஜபதிராய், எம். ஆர், ஜெயகர், என். ஸி. கெல்கர், பி. எஸ். ஆனே, டி. வி. கோகலே, நகலே.

முதலில் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் உத்தியோகம் ஒப்புக் கொள்வது என்று காங்கிரசில் தீர்மானித்தார்கள். சர்க்கார் இணங்கி வரவில்லை; சட்டசபையை விட்டு வெளிவந்தாய் விட்டது. இப்போது மந்திரிகளுக்கு அதிகாரம் கொடுத்தால் ஒப்புக் கொள்ளுவது என்று தீர்மானித்தாய் விட்டது.

# சுயராஜ்யக் கட்சியும் முகம்மதியரும்.

சென்ற வாரம் நமது பத்திரிகையில் இதே தலைப்பின்கீழ் வெளிவந்த விஷயத்தை நேயர்கள் அறிவார்கள். அதில் எல்லைப்புற மாகாண சீர்திருத்தத்தைக் கோரிய சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த முகம்மதியர்களின் பிரேரணையை பண்டித நேரு முதலிய சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் சில மொண்டிச் சமாதானங்களைச் சொல்லி முகமதியர்கட்கு விரோதமாய் அரசாங்கத்தார் சார்பில் ஓட்டுக்கொடுத்து அத்தீர்மானத்தை வீழ்த்தியதினால் சுயமரியாதையுள்ள முகம்மதியர்கள் சுயராஜ்யக் கக்ஷியினின்று விலகிக்கொண்டனர் என்று எழுதியிருந்தோம். அக் கட்சியிலுள்ள முகமதிய பிரதமருள் ஒருவரான மௌல்வி மகமது ஷாபி அவர்கள் தான் சுயராஜ்யக் கக்ஷியிலிருந்து விலக்கிக்கொண்டதோடல்லாது இந்தியா சட்டசபை ஸ்தானத்திலிருந்தும் விலகிக் கொண்டதாகத் தெரிகிறது. இது நாம் கூறியதை பலப்படுத்தும். தன் காலில் நிற்கக்கூடிய சுய மரியாதையுள்ள எவரும் இனி அக்கட்சியி லிருக்கமாட்டாரென்பது துணிபு.

## ஈரோடு தமிழ்ச் சங்கம்.

ஈரோடு தமிழ்ச் சங்கம் 18-4-26-ல் ஞாயிறன்று கோயமுத்தூர் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரால் திறந்து வைக்கப்பெற்றது. திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் "கல்வியும் கேள்வியும்" என்பது பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார். பல முக்கியமானவர்களெல்லாம் வந்திருந்தார்கள். சங்கம் நிதி இல்லாதது.

ஓம்.

## சித்தர் திருநாள் அறிவிப்பு.

நாளிது அக்ஷய ஆண்டு சித்திரை-மீ 15-ல செவ்வாய்க்கிழமை (27-4-26) சித்திரைப் பருவத்தன்று ஸ்ரீ யோகானந்தாச்சிரமத்தில் பகல் 11 மணிக்குச் சித்தர்கள் திருவுருவத்திற்கு அலங்கார ஆராதனைகளும், சிறுவர்களுக்கமுது படைப்பும் நடைபெறும். மாலை 6-மணிக்குமேல் "சித்தரும் தமிழும்" என்ற பொருள் பற்றிப் பெருஞ் சொற்பொழிவுகள் தக்கார் அவைத்தலைமையின் அறிஞர்கள் பலரால் நிகழ்த்தப்படும்.

சித்தரென்பார் தமிழ்மொழிக்கும் அதன் வழியாகிய கலைகளுக்கும் தலைவர்களாதலால் ஒவ்வொரு தமிழரும் இவ் விழாக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளார்களென்பதை யறிவுறுத்துகின்றேன்.

அமைச்சர்,— சண்முகானந்தசாமி.

## ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கம்.

சத்தூருக்கு அடுத்த ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாதாண்டு நிறைவுவிழா இவ்வாண்டு வைகாசித் திங்கள் முதல்வாரவாக்கில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையின்கீழ் நடைபெறும்.

## காந்தியடிகளும் திரு: கலியாணசுந்தர முதலியாரும்

"நவசக்தி" ஆசிரியர் திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஒரு பெரிய காங்கிரஸ் பக்தராம். காந்தியடிகள் கீறிய கோட்டைத் தாண்டாதவராம். இத்தகைய சீரியர் சின்னாட்களாக "காங்கிரஸ் தலைவர்"களெனப்படும் சிலருடன் சேர்ந்துகொண்டு தமிழ் நாட்டில் திக்விஜயம் செய்து வருகின்றார். இவருடன் சேர்ந்துவருபவர்கள் உண்மையான காங்கிரஸ் வாதிகளா என்பதையும் வாஸ்துவத்திலேயே தேச நன்மைக்குப் பாடுபடுகிறவர்களா வென்பதையும் கவனிப்போம்.

உண்மையான காங்கிரஸ்காரர் யார் என்பதைப்பற்றி காந்தி அடிகள் கூறுவதாவது:—

காங்கிரஸ் காரருக்குப் பின்வரும் லக்ஷணங்கள் இருக்கவேண்டும். (1) கதரில் பூரண நம்பிக்கை கொள்ளவேண்டும். அவர் தற்காலிக உடையாகவோ அல்லது வெளிவேஷத்திற்கான உடையாகவோ கதரை அணிபவராக இருக்கக்கூடாது. உண்மையான ஆர்வத்துடன் கதர் அணிபவராக இருக்கவேண்டும். (2) தீண்டாமை விலக்கில் நம்பிக்கை கொண்டவராக இருக்க வேண்டும். தீண்டத்தகாதவரெனக் கூறப்படுகிறவர்களுடன் அவர் தாராளமாகக் கலந்துறவாடக் கூடியவரா யிருக்கவேண்டும். பல வகுப்பினருள்ளும் ஒற்றுமை இருக்கவேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டவராக இருக்கவேண்டும். (3) அகிம்சை, சத்தியம் ஆகிய காங்கிரஸ் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராக யிருக்கவேண்டும்."

காந்தி அடிகளார் வகுத்துள்ள மேற்கண்ட நெறிப்படி திரு. முதலியாரை கூட்டிக்கொண்டு போகும் ஐயங்காரின் கோஷ்டியினருள் எவராவது இருக்கிறாரா? அந்நெறிப்படியே இருக்கிறவர்களாக யிருந்தால் திரு. முதலியாரைப்பற்றி யாதல் அவரால் துணை புரியப்பெறும் கோஷ்டியாரைப்பற்றி யாதல் இங்கு எழுத நேரிடாது. அக்கோஷ்டியிலிருப்போர் அனைவரும் காங்கிரஸ் நெறிக்கு நேர்மாறாக நடப்பவரேயாகும். திரு. சீனிவாசய்யங்கார் கதரில் கொஞ்சமும் நம்பிக்கை யில்லாதவர் சமீபத்தில் அவர் கோவைக்கு வந்திருக்கும்போது கதர் விஷயம் காங்கிரசில் சேர்க்கப்பட்டதால்தான் காங்கிரஸ் குட்டிச்சுவராகப் போயிற்றென்றும், இன்னமும் நூல் நூற்போர் சங்கமும், கதர் போர்டும் காங்கிரசுடன் சம்பந்தம் வைத்திருப்பதாலேயே காங்கிரஸ் இயக்கம் க்ஷீணித்து வருவதாகவும் மற்றும் வேறு பலவாறாக தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தாரென நம்பத்தக்க இடத்திலிருந்து நமக்கு செய்தி வந்திருக்கிறது. இது முதலாவது லக்ஷணத்திற்கு முரணானது. குருகுலக்கிளர்ச்சி கிளம்பியபோது பிராமணரல்லாத குழந்தைகளுக்கு பிராமணக் குழந்தைகளுடன் சமபந்தி போஜனம் அளிக்கக்கூடாதென சிலர் வாதாடியபோது அதற்கனுகூலமாய் நடந்து கொண்டவர். இது மகாத்மா கூறிய 2-வது, 3-வது லக்ஷணங்களுக்கு முரணானதாகும். ஆகவே இவர் எப்படி காங்கிரஸ்காரராவார்? இவர் தேச விடுதலைக்கும் பிராமணரல்லாதாருக்கும் முற்றும் நேர் விரோதியாவார். இதை திரு. முதலியாரால் மறுக்கமுடியுமா?

திரு சத்தியமூர்த்தியும் கதரில் கொஞ்சமும் நம்பிக்கை யில்லாதவரென்றே கூற வேண்டும். சமயத்திற்குத் தக்கபடி நடப்பவரேயாகும். திரு எம். கே. ஆச்சாரியைப் பற்றி நாம் கூறவேண்டியதில்லை. பிராமணக் குழந்தை ஒன்று பிராமணரல்லாத குழந்தை முன் சாப்பிட்டதாகக் கேள்விப்பட்டால் ஒரு மாதம் உண்ணா விரதம் அனுஷ்டிப்போன் என்று கூறிய மகான். இவர்தானா பல வகுப்பினரையும் ஒன்றுபடுத்தப் போகிறவர், தீண்டாமையை விலக்கப்போகிறவர்? திரு. சி. வி. வெங்கட்ரமண அய்யங்காரைப் பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொள்வதற்கே கொஞ்சமும் யோக்கிதையில்லாத இவர்களையெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் என்று கபடு சூதற்ற பாமரர்களிடம் கூறி, அவர்களுக்கு ஓட்டு சேகரித்துத் தர ஊர் ஊராய்த் திரியும் திரு. கலியாணசுந்தர முதலியாரது செய்கை எப்படி காந்தியடிகளை ஆதரிப்பதாகும்? "எம் காந்தியடிகளார்," "எம் மகாத்மா". "எம் சத்திய உரு" "எம் சாந்த மூர்த்தி" என்று மகாத்மா காந்தியைத் தனக்கே சொந்தமாக்கிப் பேசிவரும் திரு முதலியார், மகாத்மா கூறிய லக்ஷணங்களுக்கு எவ்வாற்றானும் பொருந்தாதவர்களை காங்கிரஸ் தலைவர்களென்று கூறி அவர்களுக்கு ஓட்டு சேகரித்துத் தருவதின் இரகசியம் என்ன என்பதை வாசகர்கள்தான் அறியவேண்டும்.

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குடித்து விடுகிறீர்கள்? யாராவது நம்புவார்களா? ஒருக்காலும் நம்பமாட்டார்கள். ஆதலால் ஜாதி உயர்வை உத்தேசித்து இவற்றை விட்டுவிட வேண்டுமானால், மற்றவர்கள் முதலில் விடட்டும்.

"மதுபானம் மனிதனின் ஒழுக்கத்திற்கு விரோதமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். மது விலக்குக்காக நானும் சிறிது தொண்டுசெய்திருக்கிறேன். ஆனால் ஜாதி உயர்வுக்கு எல்லா ஜாதியாரும் சாப்பிடும் மது விலக்கு ஒன்றும் தடை செய்வதில்லை. ஆகையால் மது விலக்கும் மாமிச விலக்கும் ஜாதி உயர்வுக்கு அவசியம் என்று சொல்வது வேண்டுமென்றே சொல்லும் பொய். அல்லாமலும் உங்களிடமும் சில குற்றங்கள் இருக்கிறதை சொல்லாமலிருக்க முடியவில்லை. அதாவது நீங்களாகவே உங்கள் ஜாதிக்கு இழிவு சம்பாதித்துக்கொள்ளுகிறீர்கள். அனாவசியமாய் யாரைக் கண்டாலும் 'சுவாமி' என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்கிற எண்ணம் உங்கள் ரத்தத்தில் கலந்திருக்கிறது. அதை மாற்றிவிட வேண்டும். ஒரு மனிதனைப் பார்த்தால் அவனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்கிற எண்ணம் உங்கள் மனதில் உதிக்கவேண்டும். சுய மரியாதையில் கவனமில்லாத ஜாதியாரை உயர்த்தினாலும் உயராது. அவனவனுக்கே, தான் மனிதன் என்கிற உணர்ச்சி வரவேண்டும். நீங்கள் இனிமேல் யாரையும் 'சுவாமி' என்று கூப்பிடக் கூடாது. வேண்டுமானால் 'அய்யா' என்று கூப்பிடுங்கள். நீங்களாகவே பதுங்குவதும் ஒதுங்குவதுமான துற்குணங்கள் உங்களை விட்டுப் போகவேண்டும். அன்றுதான் நீங்கள் சமத்துவமாக நடத்தப் படுவீர்கள்," என்று பேசி முடித்தார்.

## சத்திய மூர்த்தியும், கதரும்.

சில மாதங்களுக்கு முன்னர் சேலத்திலே கதர் சாலையைத் திறந்து வைத்த சென்னை டாக்டர் சி. நடேச முதலியார் அதுசமயம் கதராடை அணிந்து வராமல் சுதேச பட்டு டைகளைத் தரித்திருந்ததைப்பற்றி பிராமண சிகாமணியான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எள்ளி நகையாடினார். அதாவது டாக்டர் முதலியார் மில்லில் நெசவான பட்டாடை தரித்துக்கொண்டு கதர் சாலையைத் திறந்து வைத்ததானது, கொள்கைக்காக நெற்றியில் விபூதியும் வயிற்றுப் பிழைப்புக்காக வயிற்றில் நாமமும் தரித்திருப்பவன் கதையாக யிருக்கிறதென்று கூறினார். அதற்கு டாக்டர் முதலியார் இந்தியாவில் கையினால் நெசவானாலும் ஆலை நெசவானாலும் இரண்டையும் சுதேசியமென்றே தாம் கருதுவதாகவும் ஆகையால் சுதேசியத்தை ஆதரிக்கவேண்டியதே எங்கள் கொள்கை என்றும் உள்ளதைக்வெளிப்படையாகக் கூறினார்.

ஆனால் சத்தியத்திற்கே உழைக்கிறேனென்று சொல்லும் சத்திய கீர்த்தியின் பிள்ளைகளான சத்தியவந்தர் குலத்திலுதித்த நித்தியங்கத்தி "ஸ்ரீமான் சத்திய மூர்த்தி, புதுவருஷத் திருநாளன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த பெருங் கூட்டத்தில் முற்றிலும் பரதேசி மயமாய் விளங்கினா"ரென்று "லோகோபகாரி"யில் பாரி எழுதியிருக்கிறார்.

இப்படி யிருக்க, கொள்கைக்காகத் திருநீறும் பிழைப்புக்காக திருநாமமும் போட்டுக் கொண்டலையும் பாசாண்டி என இப்பொழுது ஸ்ரீமான், சத்திய மூர்த்தியை அழைப்பதா? அல்லது டாக்டர் முதலியாரை அழைப்பதா? ஆம்! பிராமணர்கள் செய்தால் அது மருந்துக்காகச் செய்ததாய்ப் போய்விடுகிறது. பிராமணரல்லாதார் எது செய்தாலும் அது வயிற்றுக்கில்லாமல் செய்தாரென்றாகிவிடுகிறது. ஏனென்றால் செல்வாக்குள்ள பத்திரிகைகள் பிராமணர்கள் கைவசம் சிக்கியிருக்கிறது. நமது ஜனங்களும் அதையேதான் பார்க்கிறார்கள். லோகோபகாரியையும், நடார் குல மித்திரனையும் குடியரசையும் பார்த்தால் அது தேசத்துரோகமாய்விடும். ஏன் பிராமணர்கள் என்னதான் சொல்லமாட்டார்கள்?

## மூட்டை சோதனை.

—:o:—

பிராமணர்கள்,
தங்கள் பின்னால் திரியும்
பிராமணரல்லாதாரிடம்
வைத்திருக்கும் மதிப்பு.

சென்ற மாதத்திற்கு முன் மதுரையில் நடந்த மகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் முடிந்து எல்லோரும் திரும்பி, ரயிலுக்குவரும் போது ரயில்வே மேடையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருடைய சட்டைப்பையிலிருந்த சிறு பணப்பை காணாமல் போய்விட்டதாம். இதற்காகவேண்டி அவர்களுடன் சென்ற இரண்டு முக்கியமான பிராமணரல்லாதாரின் மூட்டையையும் மடியையும் சோதனை போட்டுப் பார்த்ததாக ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

இதை நாம் கேட்கும்போது நமது காதில் நாராசம் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அவ்விரண்டு பிராமணரல்லாதாருள் ஒருவர் 5, 6-வருஷமாய் காங்கிரசிலுழைத்து வரும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர். மற்றொருவர் செல்வாக்கும் மதிப்புமுள்ள பிரபலஸ்தர்.

இவர்கள் இருவரும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணப்பைக் காணாமல் போனதற்காக, எந்தக் காரணத்தைக் கொண்டானாலும், தங்கள் மூட்டையைப் பிரித்துக் காட்டினதற்கு நாம் மிகவும் வெட்கப்படுகிறோம். அல்லாமலும் இந்தப் பிராமணர்களுக்கு இவர்களைப் பரிசோதனை செய்யும்படியானதோர் தைரியமேற்பட்டதானது பிராமணரல்லாதாரின் நிலையை இகழ்ந்து காட்டுகிறது. இன்னும் சிலருக்கு எந்த சமயத்தில் என்ன மரியாதைகள் கிடைக்குமோ; கடவுளுக்குத்தான் தெரியும்.

## மதிப்புரை.

### "தமிழ் மகள்."

ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பின் தமிழ் நாட்டிலே, ஏன், இந்தியா வெங்கும் பல பத்திரிகைகள் சமூகமுன்னேற்றத்தையும் தொழில் வளர்ச்சியையும் பாஷாபிவிருத்தியையும் கருதி ஆரம்பிக்கப் பட்டுள்ளவைகளைக்கண்டு மகிழ் வெய்துகிறோம். நாட்டின் முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் பத்திரிகைகளும் சிறந்த சாதனங்களிலொன்றாகும். "தமிழ் மகள்" என்றபுனிதப் பெயர் கொண்ட மாதப்பத்திரிகையின் முதலாம் பரல் நமது பார்வைக்கு வரப் பெற்றோம். தமிழ்நாட்டில் நிலவும் சிறந்த மாதப் பத்திரிகைகளில் இதுவும் ஒருஸ்தானம் வகிக்குமென்பது மிகையாகாது. பெரிய அளவில், நல்ல கடிதத்தில், அறிஞர் பலரால் வரைந்த பல அரியவிடயங்கள் வெளிவந்துள. இங்கு நம்மைக் கவர்ந்தது இதன் தலைவியைப் பற்றியேயாகும் "தமிழ்மக்களு"க்கு திருமகள் மா. மங்களம்மாள் ஆசிரியையாகக்கிடைத்ததுபற்றியும், பலதாய்மார்கள் கட்டுரை எழுதிவருவது கண்டும் களிபேருவகையெய்துகிறோம். தமிழகத்துத்தாய்மார்கள் "தமிழ் மகள்" பத்திரிகையை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் "தமிழ் மகள்" முக்கியமாய் தாய்மார்களின் முன்னேற்ற வகையில் குறிகொண்டுழைத்தலை சிறப்புடைத்து.

வருடசந்தா 3-8-0

மானேஜர்,
"தமிழ் மகள்",
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## "கிருஷிகன்."

விவசாயிகளுக்குகந்த பல அரிய விஷயங்களை எடுத்துரைக்கும் "கிருஷிகன்" பத்திரிகையின் 9-ம் புத்தகம் முதல் பிரதி வரப்பெற்றோம். நவீனகத்தில் (நாவலுலகில்) பெரும் பேர்படைத்த திரு. ஜெ. ஆர். ரெங்கராஜூ, விவசாய இலாக்காவில் டெப்டி டைரக்டராய் இருந்துபேருத்விபுரிந்து வந்த ராவ்பகதூர். ஜெ. செல்வரங்கராஜூ ஆகிய இருவரையும் ஆசிரியராகக் கொண்டு நடத்தப்படுவதாகும். விவசாயிகளுக்கு வேண்டியபலமுக்கிய விஷயங்கள் இதில் பொதிந்து கிடக்கின்றன. "களப் பிச்சை போடுவதைப்போல் நினைத்துக்கொண்டு வருஷத்திற்கு ரூ. 1. 'கிருஷிகனுக்கு', களப் பிச்சை கொடுத்து" ஆதரிக்குமாறு இதன் ஆசிரியர் கேட்டிருப்பதுபோல் நாமும் "கிருஷிகனை" ஆதரிக்க கேட்டுக்கொள்ளுகிறோம். பலவகைக்கும் எவ்வளவோ செலவு செய்யும் விவசாயிகள் அச்செலவோடு செலவாய் வருஷம் ஒன்றுக்கு ரூ. 1. செலுத்தி "கிருஷிகன்" பத்திரிகையைப் படித்து வந்தால் விவசாயத்தில் தீர்க்க அறிவும் அதனால் மிகுந்த லாபமும் பெறுவார்களென்பதில் ஐயமில்லை. "கிருஷிகன்" என்னும் பெயருக்குப்பதிலாய் "விவசாயி" என்னும் தமிழ்ப் பெயரே எல்லோருக்கும் எளிதில் தெரியக் கூடியது. ஆதலால் இதன் பெயர் ஒன்றே நமக்குப் பிடிக்க வில்லை.

"கிருஷிகன்" மானேஜர்,
ஜெகந்நாதபாக், சைதாப்பேட்டை.

## திருவாரூர் முனிசிபல் தமிழ் சித்த வைத்தியசாலை.

தமிழ் சித்த வைத்தியமானது நம் நாட்டவரில் மிகப் பலருக்கு ஓர் புதுப் பெயராகவே தோன்றுகிறது. சித்த வைத்தியமென்பது தமிழ்நாட்டில் வதிந்த சித்தர் (ஞானி)களால் தமிழ்நாட்டின் சீத, உஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு வகுத்துத் தொகுக்கப்பட்ட வைத்திய முறையாகும். இம்முறை தமிழர்களின் செல்வாக்கு தலைசிறந்து நின்றகாலையில் ஓங்கி பரவி இலங்கியது. தமிழரின் செல்வாக்கு அருகி ஆரியரதும், ஆங்கிலரதும் ஆதிக்கம் பெருகவே ஆயுள்வேத வைத்தியமும், ஆங்கில வைத்தியமும் தலைவிரித்தாடும் நிலைக்கு வந்துவிட்டன. சிறிதுகாலமாகவே நமது பண்டை வைத்திய முறை தலைதூக்கத் தலைப்பட்டிருக்கிறது. நம் தமிழ்நாட்டின் சீத உஷ்ண நிலைமையறிந்து நோயின் குணங்குணத்திற்குத் தக்கவாறு வகுக்கப் பட்டது சித்த வைத்தியமேயாகும். ஆயுள்வேதமும் ஆங்கில வைத்தியமும் நம் நாட்டிற்கு ஒரு வகையில் முரண்பாடானவையாகும். நாம் பார்த்த வரையில் திருவாரூர் முனிசிபல் தமிழ் சித்தவைத்திய சாலையே சிறந்த அத்தாக்ஷியாக நிலவுகிறது. அவ்வைத்தியசாலைக்கு நாம் போய் பார்வையிட்டபோது அங்கிருந்த வைத்திய நிபுணரின் ஆராய்ச்சிப் பெருக்கையும் அவரால் சித்தர் நூல் வழி, பல சிறந்த மூலிகைகளினால் ஆக்கப்பட்ட மருந்து வகைகளையும் கண்டு பேரானந்தங் கொண்டோம். நாள்தோறும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு மேல் அங்குவந்து மருந்து வாங்கிப்போகிறார்கள். இத்தகைய தமிழ் சித்த வைத்தியசாலைகள் தமிழ்நாட்டிலுள்ள ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி யூனியன் போர்டு முதலிய சபைகளின் தலைவர்களும் அங்கத்தினர்களும் தங்கள் எல்லைக்குள் இத்தகைய வைத்திய சாலைகளேற்படுத்தி தமிழரின் மாண்பையும் சித்தர்களின் பெருமையையும் விளக்கி தமிழரின் வியாதியை நீக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வழிகாட்டியாய் இத்தகைய சிறந்த தொண்டிலிறங்கிய திருவாரூர் நகரபரிபாலன கழகத்தாரை நாம் போற்றுகிறோம்.

### சட்ட சபைக்கு ஆள் பிடிக்கிற
## "தேர்தல் கங்காணிகள்."

தமிழ் நாட்டிலே நிலவும் பத்திரிகைகளில் பெரும்பாலும் தனது மனச்சாக்ஷிக்கு விரோதமாக எழுதி தன் சுயமரியாதையை இழந்து வாழ்கின்றன. முதுகெலும்பில்லாமலிருக்கும் இவைகள், எவ்வளவுதான் யோக்கியதையா யிருப்பதுபோல் போலித்தனமாகக் கைவீசி காலுதறி நடப்பதாகப் பாவனை செய்த போதிலும் அவைகளுக்கு முதுகெலும்பில்லாத தத்துவத்தை நாட்டார் அறியாமலிருக்க மாட்டார்கள். இப்பத்திரிகைகளெல்லாம் உண்மை யறியமுடியாமலோ, பலக்குறைவாலோ, வேண்டுமென்றோ சூழ்ச்சிக் காரர்கள் பக்கமாகவேயிருந்து வருகின்றன. ஆனால் பிறருடைய உதவியை நாடாது தன் கால் பலத்திலேயே நிற்கக்கூடிய பத்திரிகைகளில் ஒன்றாகிய நமது "நாடார் குல மித்திரன்" சுயராஜ்ய கட்சியினுடைய சூழ்ச்சியின் உண்மை கண்டு தைரியமாய் வெளி வந்து எழுதியிருப்பதில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

"சட்ட சபைக்கு ஆள்பிடிக்கிற கங்காணிமார்கள் (சுயராஜ்ய கட்சியார்) தேசமெங்கும் உலாவித் திரிகின்றனர்... சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனமென்ற பழமொழி இவர்களுக்கே தகுமென்று மகாத்மா காந்தி மௌன யோகத்தி லிருந்து விட்டார், நமது நேருக் கங்காணி, தமது தோழர்களை யெல்லாம் பிரியவிட்டு விட்டுத் துடித்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீனிவாசக்கங்காணி ஆள்பிடிக்கிற வேலையை வெகு துரிதமாய் நடத்திக்கொண்டுவருகிறார். ஒவ்வொரு முக்கியஸ்தலத்திலும் கங்காணியா பீஸ்கள் இரகசியமாய் அமைத்து வருகிறார்:—

இவ்வுரைகள் சீனிவாசய்யங்கார் கோஷ்டிக்கு ஒரு பீரங்கி வெடிபோலவே தோன்றும் சுயராஜ்யகட்சியின் கபடக் கோட்டையைத் தகர்ப்பதில் நாடார்குல மித்திரனும் நமக்குதவியாய் பங்கெடுத்துக் கொண்டிருப்பதற்கு நம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறோம்.

உ

## பொள்ளாச்சி தாலூகா நெகமம்

# ஆரம்ப ஆசிரியர்கள் மகா நாடு.

7—4—26,

### கோயமுத்தூர் ஸ்ரீமான் ராவ் சாஹிப், C. S இரத்தினசபாபதி முதலியாரவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தின் சுருக்கம்.

அன்பார்ந்த சகோதரர்களே!

இப் பெருங்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் பாக்கியத்தை எனக்கு அளித்த உங்களது அன்பைப் பாராட்டுகிறேன். கோயமுத்தூர் முனிசிபாலிடி, தாலூகா போர்டு, ஸ்தாபனங்களில் நான் வேலை செய்ய முன்வந்த காலந்தொட்டு ஆரம்ப ஆசிரியர்களுடன் நான் நெருங்கிப் பழகி அவர்கள் செய்து வரும் தேச சேவையை நன்கு அறிந்திருக்கிறேன்.

ஏழ்மை நிலையிலும், ஆசிரியர்கள் ஒழுக்கத்திலும், கடமையைச் செய்வதிலும் ஒரு சிறிதும் பிறழாது நடந்துவருவது கண்டு சந்தோஷித்திருக்கிறேன். தேச முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஊழியத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்குள்ள குறைகளை நேரில் தெரிந்திருப்பதால் அவர்களுக்கு என்னாலான உதவியை எப்பொழுதும் செய்யக்கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு தேசத்தின் சிறப்பு அத்தேசமக்களின் கல்வி, தொழில், பொருளாதாரம் இவைகளைப் பொருத்திருக்கிறது. கல்வியில்லா விட்டால் தொழில் சீர்பெறாது. தொழில் கெட்டால் பொருளாதார நிலை கெடும். ஆகையால் எத்தேசத்தாருக்கும் ஆண் பெண் இருபாலாருக்கும் கல்வி அவசியம். எல்லா மக்களுக்கும் ஆரம்பக்கல்வி எளிதில் கிடைக்கவேண்டும். மக்கள் பழக்கத்திற்கும் தொழில் முறை உபயோகத்திற்கும் ஏற்ற தாய்ப் பாஷையாகவே இருக்க வேண்டும். அந்நிய பஷை எல்லோருக்கும் எளிதில் கிடைக்காது. பொருளும் அவகாசமும் உள்ள பேருக்குத்தான் அந்நிய பாஷை கிடைக்கக்கூடும். நம் நாடு முன்னேற்றமடைய ஆரம்பக் கல்விதான் முக்கியமானது. உண்மைச் சுயராஜ்யம் விரும்புவோர் ஆரம்பக் கல்வியை நாட்டில் பரப்ப பாடுபடவேண்டும். இதற்குத் தடையாக ஜனங்களின் மனதை வேறு வழியில்திருப்ப முயலுபவர்கள் நாட்டின் க்ஷேமத்தை நாடுபவர்களல்ல. சர்க்கார் லோகல் போர்டார் மதச்சங்கங்கள், உபாத்தியாயர் எல்லோரும் இக்கல்வியைப் பரப்ப உழைக்கவேண்டியவர்கள். சர்க்காருடையவும் பொது ஜனங்களுடையவுமான விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஆசிரியர்களிடத்தில் தானிருக்கிறது.

## நமது ஜில்லா கல்வி நிலை.

இம்மாகாணத்தின் படிப்பில் பின்னிட்ட ஜில்லாக்களில் நம் ஜில்லாவும் ஒன்று. 20,53,651 ஜனத் தொகையுள்ள நம் ஜில்லாவில் 40,817 ஆண் 7,728 பெண்களுமே படிக்கின்றனர். ஆனால் படிக்கும் வயதுள்ளவர்கள் 2,07,777 ஆண்களும் 1,60,842 பெண்களும் இருக்கின்றனர். இதனால் எத்தனை ஆயிரம்பேர் படிக்காமலிருக்கின்றனரென்பது எளிதிலறியலாம். படிக்கத் தக்க வயதில் 100-க்கு 80-ஆண்களும் 95 பெண்களும் தற்குறிகளாயிருப் பதுவருந்தத்தக்கது. இப்பெருந் தொகையினருக்கு வயது முதிர்ந்த பின் உலகவிவகாரம் தெரிய வழியேற்படாது. ஆதலால் இவர்கள் பிறரால் வஞ்சிக்கப்பட்டுத் துன்புறுவார்களென்றுநினைக்க மனம் துய்ருகிறது. இவர்களறியாமையை நீக்குவது நம்கடமை. இதைவிட என்னபெரியதேசசேவை ஒருவர் செய்யமுடியும்.

## நடுத்தரக் கல்வி.

நமது ஜில்லாவில் நடுத்தரக் கல்வி சிறிது விருத்தியடைந்து வருகிறது. ஆரம்ப ஆசிரியர் பெரும்பாலார் நடுத்தரப் பாடசாலையிற் பயின்றோராவர். இன்னும் நடுத்தரப் பாடசாலைகளில் தொழிற் கல்வியுமிருக்குமானால் நம் நாட்டில் பஞ்சம் நீங்கும். இந்த ஜில்லாவில் 19 நடுத்தரப்பாடசாலைகளுண்டு. இன்னும் 4 பாடசாலைகள் சீக்கிரம் ஏற்படப் போகிறது. கொள்ளேகாலத்தில் பட்டு நூல் தொழிலும், பெருந்துறை, சத்தியமங்கலம், பவானி இந்தவூர்பாடசாலைகளில்நெசவுத்தொழிலும், தாராபுரத்தில் தச்சுத்தொழிலும் கற்பிக்கப்படுகின்றன. இது போதுமானதல்ல. நடுத்தரக்கல்வி ஆரம்பக் கல்விக் கிராமவாசிகளுக்கு எளிதில் கிடைக்கப் பொருத்தமான வகையிலும் நடுத்தரக் கல்வியை மாற்றி அமைக்கவேண்டுமென்பது எனது விருப்பம். நடுத்தரக் கல்வியை மாற்றியமைக்க ஆராய்ந்துவரும் கமிட்டி எனது விருப்பத்தை நிறைவேற்றுமென்று நம்புகிறேன். அல்லது ஜில்லா போர்டு ஸ்கூலின் தொழிற்சாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களை பயிற்றுவித்து கிராமாந்திரங்களில் தொழிற் கல்வி பரவச் செய்ய வேண்டும்.

## அதிக பள்ளிக்கூடம் வேண்டும்.

எடுகேஷன் சர்வே ரிபோர்ட்டுப்படி நம் ஜில்லாவில் 1924—25 ஹூத்திய் 1377 பள்ளிக்கூடங்களே இருக்கிறது. 1929 உபாத்தியாயர்களிருக்கின்றனர். நமது ஜில்லாவிற்கு இது போதுமானதல்ல. 1,000 ஜனத்தொகைக்கு மேற்பட்ட 104 கிராமங்களும், 500-க்கு மேற்பட்ட 136 கிராமங்களும்ஆக240கிராமங்களிலிருக்கிறது. இவைகளுக்கு இப்போதுள்ள பள்ளிக்கூடங்கள் போதுமானதாகாது. இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாக 500 ஜனத்துகைக்கு மேற்பட்ட எல்லா கிராமத்திலும் தாலூகா போர்டார் பாடசாலை ஏற்படுத்துவது அவர்கள் கடமையாகும்.

## பள்ளிக்கூடம் ஏற்படத் தடைகள்.

கிராமங்களில் பாடசாலைக்குக் கட்டடம் சௌகரியமாய்க் கிடைப்பதில்லை. கிராம பாடசாலைக்கு அதிக பெரிய கட்டடம் தேவையில்லை. பிள்ளைகள் எண்ணிக்கைக்குப் போதுமான விஸ்தீரணமுள்ளதாயும், காற்றோட்டமுள்ளதாயும், பஞ்சமர் உட்பட எல்லா ஜாதியாரும் சம உரிமையோடிருக்க ஆக்ஷேப மில்லாததாயு மிருக்கவேண்டும். சில தாலூகா போர்டு படசாலைகள் சில ஜாதியாருக்கு உபயோகப்படாமற் போயிற்று. முன்னால் நாம் இவ்விஷயத்தில் தக்க கவனம் செலுத்தாததால் இக்குறை நேர்ந்தது. தவிற பள்ளிக்கூடத்திற்கு நல்ல உபாத்தியாயர்கள் கிடைப்பதும் கஷ்டமாகத்தானிருக்கிறது. இதனால் கல்வி பரவ தாமதம் ஏற்படுகிறது.

## மனப்பான்மை மாறவேண்டும்.

ஜனங்களுக்கு தங்கள் க்ஷேமத்தில் அக்கரைவேண்டும். நமக்கு ஊக்கமில்லாவிட்டால் கவர்ன்மெண்டார்தான் என்ன செய்வார்கள். பொருள் படைத்தவர்கள் புண்ணியத்திற்காகவோ புகழுக்காகவோசெய்து வரும் தான தர்மங்கள் ஒரே வழியில்தானிருக்கிறது. அவர்கள் கோவிற்கட்டுதல் சத்திரங்கட்டுதல் முதலிய தர்மம் செய்வதுபோல் பள்ளிக்கூடங் கட்டுதல் ஆஸ்பத்திரி ஏற்படுத்துதல் முதலிய தர்மம் செய்வார்களானால் உத்தமமாகும். மக்கள் கல்வி பெற்று சுயமதிப்பும் சுதந்திரமும் அடையவேண்டும். அதைச்செய்து வைப்பதுதான் தலை சிறந்த தர்மமென்றுபொருள்படைத்தவர் உணர்ந்துகொண்டால் எளிதாக நாட்டில் கல்விபரவும்.

## ஆதிதிராவிடர் கல்வி.

நம் நாட்டில் 6-ல் ஒரு பங்கு கீழ் குலத்தோரெனப்படுவோர் உண்டு. இவர்கள் கிராமவிவசாயவேலையிலமர்ந்திருக்கின்றனர். மேல் ஜாதியாரிடத்தில் இவர்கள் படுங்கஷ்டம் கொஞ்சமல்ல. கிராமத்தில்இவர்களுக்கு தண்ணீர் கிடையாது. தெருவில் நடக்கக் கூடாது. தொட்டால், கண்ணில் கண்டால் பாபம். பாடாசலைகளுக்கு அவர்கள்வரக் கூடாது. இவர்களை இம்மாதிரி நாம் நடத்தும்வரையில் நாம் மேலே போகமுடியாது. நம்மைப்போல் மனித ஜென்மம் எடுத்து வந்தவர்களுக்கு நாம் பிறப்புரிமையையும் சுயமரியாதையையும் கொடுக்காமல் நசுக்கி வருகிற நாம், சுதந்திரம் அதிகாரம் வேண்டுமென்று கேட்டால் நம்மைப்பார்த்து சிறிக்க மாட்டார்களா? நாம் தற்காலம் அனுபவிக்கும் கஷ்டமெல்லாம் நாம் பஞ்சமசகோதரர்களுக்கு தினம் செய்துவரும் கொடுமையின் பிரதிபலனாகும். தேசவிடுதலையை விரும்புகிறவன் தீண்டாமையை ஒழித்துவிட முன் வரவேண்டும். தீண்டாமை ஒழிய ஆதிதிராவிடர்கள் கல்வி யடையவேண்டும். இதில் ஆரம்ப ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். வகுப்பு வித்தியாசம் பாடசாலையிலில்லாமல் எல்லா ஜாதி குழந்தைகளையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது உங்கள் கடமையாகும்.

## பெண் கல்வி.

ஆண் மக்கள் பெண் கல்வியின் அவசியத்தை உணரவேண்டும். நமது பெண்கள் அடுப்பூதிகளாய் உலக நிலையறியாமல் அந்தகாரத்திலாழ்ந்திருக்கின்றனர். பெண்களுக்கும் தேச பக்தியிருந்தாலொழிய நம் நாடு முன்னுக்குவராது, படிக்கவேண்டியுள்ளபெண்கள் 100க்கு 95பேர் படிப்பில்லாமலிருந்து வருகின்றனர். 1923—24-ல் 106 பெண் பாடசாலை இருந்தன 24—25 வருஷத்தில் 115 பாடசாலைகளாயின. 24—25-ல் பெண் கல்விக்கு 1,36,663 ரூபாய் செலவாயிற்று. 100-க்கு 5 பேர் படிக்க இவ்வளவு பணம் வேண்டுமானால் 100-க்கு 50 பேராவது படிக்க எவ்வளவு பணம் வேண்டும். என்பதைக்கவனியுங்கள். (தொடரும்)

ஓம்
வந்தேமாதரம்.

## ஸ்ரீ காந்தி ஆசிரமம், சிராவயல்.

——:(○):——

மகாத்மா காந்தியடிகளின் திருப்பெயர் கொண்டிலங்கும் இவ்வாசிரமம், குரோதன வரு தை-மீ 29-உ சிராவயலில் ஆரம்பிக்கப்பெற்றது. பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை என்பதே இவ்வாசிரமத்தின் முக்கிய கொள்கையாகும். தேசியக் கல்வி, குருகுலக் கல்வி, ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றம், கதர் அபிவிருத்தி முதலிய விஷயங்களில் இவ்வாசிரமம் உழைக்கும். குரு குலக் கல்விக்காக மூன்று மாணவர்கள் வந்திருக்கிறார்கள். ஒருவன் ஆதிதிராவிடன். ஆசிரமத்தின் கொள்கைக்கேற்ப, அவனுக்கு ஸம உரிமை கொடுக்கப்படுகிறது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கணிதம், தேச சரித்திரம், நூற்றல் முதலியன போதிக்கப்படும். உணவு சைவ உணவேயாம். புத்தகம், உணவு முதலிய செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 10-மாத்திரம் தான் பெற்றுக்கொள்கிறோம். கானாடுகாத்தான் வயிசு சண்முகம் செட்டியார் அவர்கள் ஆதிதிராவிட மாணவனுக்காக மாதம் 10-ரூபாய் வீதம் அன்புடன் அளித்துவருகிறார். ஸ்வாமி ஆத்மாராம் முதலிய பல பெரியோர்களும் இம்மாதிரி பணம் கொடுத்து பையன்களை அனுப்புவதாக இசைந்திருக்கிறார்கள். ஜாதி பேதமற்ற உண்மையான குரு குலக் கல்வி விரும்புவோர்கள் தங்கள் சிறுவர்களை இவ்வாசிரமத்திற்கு அனுப்பி நலம் பெறலாம்.

### இராப் பள்ளிக்கூடம்.

நெற்றி வேர்வை நிலத்தில் விழ பகற்காலத்தில் வேலை செய்பவர்களுக்காக, இரவு ஆசிரமத்தாரால், தமிழ், ஆங்கிலம், நீதிக்கதைகள் முதலியன போதிக்கப்படுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நடைபெறுகிறது.

### ஸ்ரீ காந்தி வித்தியாலயம்.

இஃது தன வைசிய நாட்டுக் கல்விக் கழகத்தாரால் நடத்தப் பெறுகிறது. இதில் 35 ஆதிதிராவிட மாணவமாணவிகள் போதிக்கப்படுகின்றனர். இவர்களின் படிப்பைப் பார்த்து மகிழ்ச்சியுற்று நண்பர்கள் பலர் ஆடை, கற்பலகை முதலியன பரிசளித்து வருகிறார்கள்.

ஸ்ரீ காந்தி ஆசிரமம், ஸ்ரீ காந்தி வித்தியாலயம், இராப் பள்ளிக்கூடம் இவைகளை ஸ்ரீமான் ரு. கும்பலிங்கம் தலைமை வகித்து நடாத்தி வருகிறார்.

இவைகளின் பயனாக, மருதங்குடி ஆதி திராவிடர்களில் பெரும்பான்மையோரும் கள்குடி விடுத்தனர். மாட்டு மாமிசம் அருந்துவதில்லை. உயர்ந்த ஒழுக்கத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களிடை தோன்றியிருக்கிறது.

இவ்வாசிரமத்தைப் போற்ற தமிழர்களையும், சிறப்பாக, தனவைசிய இளைஞர்களையும் மிகவும் வேண்டுகிறோம். உதவி புரிவோர்களும் மாணவர்களை அனுப்புவோர்களும் அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

கு. குட்டலிங்கம்,
ஸ்ரீ காந்தி ஆசிரமம்,
சிராவயல்,
ராமநாதபுரம் ஜில்லா.

## "சுதேசமித்திர"னின் தேசபக்தி.

பெருந்தேசபக்தர்களெனப்பட்டமோட்டம் செய்து வருகின்றவர்களான பிராமணர்கள் இந்தியாவின் சுயராஜ்யத்திற்காகப்பாடுபட்டவர்களல்லவென்றும், அவர்கள் செய்தவரும் ஆரவாரங்களெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களான பிராமணர்கள் மல்கிய பிராமண ராஜ்யம் நிலைநாட்டவேயல்லாமல் வேறில்லையென்று நாம் பன்முறை கூறிவந்திருக்கிறோம். நாளடைவில் இவ்வுண்மை புலனாகிவருகிறதென்பதை அடியிற்காணும் உரைகளால் அறிந்து கொள்ளலாம்.

திரு. விபினசந்திரபாலர்சமீபத்தில் நடந்த கல்கத்தா இந்து முஸ்லீம் சச்சரவைப் பற்றி எழுதுங்காலையில், இத்தகைய அமளி நாட்டில் பரவாதிருக்க வேண்டுமானால் விரைவில் சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென வரைந்து விட்டு, "தற்சமயம் சட்டம் ஒழுங்கு" சம்பந்தப்பட்ட பொறுப்பும் மந்திரிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டால் அவர்கள் ஜாதி வேற்றுமை பாராமல் சரியாக வேலை நடத்துவார்கள்" என்றும் எழுதியுள்ளார். ஒருவகையில்திரு.பாலரின்கருத்துபோற்றத்தக்க தொன்றாகும். ஏனெனில் மந்திரிகள் ஜனங்களின் பிரதிநிதிகளாதலாலும் அவர்கள் பாமரமக்களிடம் நெருங்கிப்பழகியவர்களாதலாலும் நாட்டில் அமைதி நிலவ எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அறிந்து அதற்கேற்றப்போல 'சட்டம் போலீஸ்' வகைகளை சீர்பெற நிர்வகிப்பார்கள்.

திரு. பாலரின் கருத்தைப்பற்றி "சுதேசமித்திரன்" தன் 19-4-26உ பத்திரிகையின் உபதலையங்கமொன்றில் பொருத்த மற்ற சில போலிக்காரணங்களை எழுதிவிட்டு "மந்திரிகள் வசம் போலீஸ் டிபார்ட்டு மென்டிருந்தால் நலமென்று சொல்வதன் பொருள் நன்கு விளங்கவில்லை" என்று வரைந்து அதைக்கண்டித்துள்ளான். இது "சுதேசமித்திர"னின் இயற்கைக்குணமாகும்.

இப்பொழுது போலீஸ் நிர்வாகமும் சட்டமும் சட்ட மெம்பர் என அழைக்கப் பெறும் கவர்னரால் நியமிக்கப்பட்ட ஒரு நிர்வாக மெம்பரிடமிருக்கிறது. அதிலும் சென்னையைப் பொறுத்த அளவில் "சுதேசமித்திர"னின் இனத்தைச் சேர்ந்த பிராமணரொருவரிடமிருப்பதால் அதைப்பிடுங்கி மந்திரிகள் வசம் ஒப்புவிக்க "சுதேசமித்திர"னுக்கு எவ்வாறு மனத்துணியும்? மந்திரிகள் பிராமணரல்லாதவரன்றோ?

சமீபத்தில் நடந்த சட்ட சபைக்கூட்டமொன்றில் மந்திரிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், போலீஸ் நிர்வாகமும் சட்டமும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் (பிராமணர்) கையிலிருப்பதால் அதனால் எவ்வித நியாயமும் நன்மையும் பெறுதற்கில்லாமல் போய்விடுகிறதென்று பல முகாந்தரங்களுடன் எடுத்துக் கூறியதை பொது ஜனங்கள் ஞாபகப்படுத்தி, ஜனப்பிரதி நிதித்துவம் கொண்ட சுயாட்சிக்குப் போராடுவதாக வாய்ப்பறையறைந்து வரும் "சுதேசமித்திரன்" எழுப்பியுள்ள இவ்வாதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து அதன் கபட மனத்தை அறிந்துகொள்ள வேண்டுகிறோம். கவர்னரால் நியமிக்கப்படுவரிடமிருந்தாலும் பரவாயில்லை, ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகளிடம் (பிராமணரல்லாத மந்திரிகளிடம்) சட்டமும் போலீஸ் நிர்வாகமும் போகலாகாதென்பது "மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுபட்டால் போதும்" என்பது போல் "மித்திரன்" வாதம் செய்கிறான்.

வர வர பிராமணர்களின் நோக்கம் வெளியாகி வருவதை நாட்டார் அறிய வேண்டுகிறோம். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பு மிகுந்த பிரதிநிதிகளிடம் ஒப்புவித்தலைக் காட்டிலும் அதிகார வர்க்கத்தின் அடிப்பீடமான கவர்னரால் நியமிக்கப்படும் ஒருவரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தலே மேல் என்று கூறும் "பிராமணமித்திர"ன், நாளடைவில், "இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுப்பதைக்காட்டிலும் இப்பொழுதிருக்கும்ஆட்சியே மேல்" என்று ஏன் கூற மாட்டான்? ஏனெனில் சர்க்கார் வசம் அதிகாரம் இருந்தால் எப்படியாவது சர்க்காரை ஏமாற்றி உத்தியோகம் பெற்றுக் கொள்ளலாம். ஜனங்களிடம் இருந்தால் அதிகக் கஷ்டப்பட்டு பணச்செலவு செய்து ஜனங்களை ஏமாற்ற வேண்டி வருகிறது. ஆதலால் இதனின்று, பிராமணர்கள் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடும் யோக்கியதையை பொது ஜனங்கள் அறிந்து கொள்ளலாம்.

### சேலத்தில்.

சேலத்தில் திரு. சீனிவாசய்யங்கார் கம்பெனியாரின் சுயராஜ்யக்கூத்து நடைபெறவில்லையென்று நமது நிருபர் ஒருவர் எழுதியிருக்கிறார். திரு. சீனிவாசய்யங்கார், சேலம் பிராமணர்கள் ஆதரவு நமக்குப்போய் விடுமென்று அஞ்சி டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களை அவமானப்படுத்திவிட்டதாயும் நாம் அறிகின்றோம். டாக்டர் வரதராஜுலு நாயுடு நாட்டின் விடுதலைக்காகப் பலமுறை சிறைக்கோட்டம் புகுந்தவர், சென்ற ஆண்டில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயும் இருந்தவர். அத்தகையோருக்கு திரு. சீனிவாசய்யங்கார் தாம் சேலத்துக்கு வருவதாய்க் கடிதம் எழுதவில்லை. டாக்டர் வரதராஜுலு நாயுடு பிராமணரல்லாதாராய் இருக்கின்றமையால், திரு. ஐயங்கார் அவ்வாறு அவமதித்தனரென்று நாம் கருதுகிறோம்! இதிலிருந்தாவது டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தக்க பாடம் கற்றுக்கொள்ளல் வேண்டும். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும் தாம் பிராமணரல்லாதார் என்பதைத் திரு. சீனிவாசய்யங்காருக்குக் காட்டிவிட்டார். எனெனின் அவர் சேலம் நாடகத்தில் கலந்துகொள்ளவில்லை.

(திராவிடன்.)

ஈரோடு ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ப்ராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பெற்றது.

## மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானால் உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தை வாசியுங்கள். இதில் உலகத்தில் நடக்கும், பல வகை மோசங்கள் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் மோசக்காரர்களிடம் ஏமாறாமல் தப்பித்துக்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமாய் இருப்பதன்றி விடா நகைப்பையும் விளைவிக்கும். நாதப் பெண்கள் இப்புத்தகத்தை பார்த்தால் குருட்டு நம்பிக்கை என்பது இந்நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள் 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

விலாசம்:—

ஸ்ரீ செல்வபதி செட்டி அண்டு கோ.,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

## சேலம் பனியன்கள்.

எங்களிடம் பல மாதிரியான பனியன்கள் தயார் செய்யப்படுகிறது. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன். இதர விஷயங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விக்டோரியா நிட்டிங் பாக்டேரி,
தெவ்வாய்ப்பேட்டை, சேலம்.

## "ஐஸ்வரிய இரகசியம்"

என்னும் புத்தகம் முற்றிலும் இனாம்! ஐஸ்வரியம் அடையும் இரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. உடனே எழுதுங்கள்.—மறந்துவிட வேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
25, தெப்பக்குளம், திருச்சி.

## கவனித்து வாசியுங்கள்.

டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்மனிலர் சோப் ஆறாத ரணங்கள், புண், சொறி, சிரங்கு, முகப்பருவு, தேம்பல் எச்சிற்றேம்பல், படை மேகப்படை, மேகத்தினால் உண்டாகும் சகலவித சர்ம வியாதிகள், நமைச்சல் இன்னும் அநேகவித சர்ம வியாதிகளை ஆச்சரியமாய் குணப்படுத்தும் முகப்பருவுகளை வெகுசீக்கிரத்தில் போக்கடிக்கும் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் இருக்கின்றன.

3-சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—3—0. தபால், பாக்கிங் கூலி வேறு. வேண்டுவோர்,

பி. எஸ். பொம்மையா, அண்கோ.,
தபால் பெட்டி 198 மதராஸ்.
என்றெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

## தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ. 2—8—0 |
| வெளிநாட்டிற்கு | ரூ. 3—0—0 |
| சாதாரண பதிப்பு | ரூ. 2—0—0 |

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலயம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.


## குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள எச்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்.

கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்
சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ
திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமி நாயக்கர் மானேஜர் காந்தி கதராலயம்.
திருச்சி—ஸ்ரீ எஸ். மாணிக்கம் பிள்ளை. திருச்சி...
கும்பகோணம்—ஸ்ரீ என். பக்கிரிசாமி பிள்ளை, ஆரியன் பிரஸ்.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ எ. சக்கரபாணி பிள்ளை. கன்னாரப்பட்டரை.
மதுரை—நியூஸ் ஏஜண்டு, சவுனிங் பஜார்,
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—நியூஸ் அண்டு அட்வர்டைசிங் ஏஜண்டு, நெ. 31 நம்பெருமாள் வீதி.
கோலார்—ஸ்ரீ பு. மு. ராஜரத்தினம் சித்தார்த்த புஸ்தகசாலை, சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு
தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C/o போர்தியோ மோட்டார் (லிமிடெட்.)
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்.

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.


## உண்மையான கதர்! கெட்டியான கதர்!

—:o:—

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடை பெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

என்றுமழியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கை கால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளை குணப்படுத்துவதில் சென்ற 45-வருஷ காலமாக என்றுமழியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துகொண்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயம்.
26 பிராட்வே மதராஸ்.

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

| | |
|---|---|
| காப்பு திரவியம் | —ரூ. 2,706. |
| மூல திரவியம் | —ரூ. 5,00,000. |
| வெளியிடப்பட்டது | —ரூ. 64,600, |
| வசூலிக்கப்பட்டது | —ரூ. 35,?40. |
| டிபாசிட்டுகள் | —ரூ. 42,012—14—0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ; கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டி கொடுக்கப்படும்.


ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-௨ வருஷாந்திரக் கூட்டமும் நடை பெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாவிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்.